பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00




சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 01 | செவ்வாய்க்கிழமை | (17.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 242

## தேசப்பற்றாளர் இரத்தினம் கொழும்பில் காலமானார்

(கிளிநொச்சி)

முன்னாள் வேலணை உதவி அரச அதிபரும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக இணைப்பாளருமான தேசப்பற்றாளர் எஸ்.இரத்தினம் நேற்று முன்தினம் காலமானார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர திடீரெனச் சுகவீனமுற்ற இவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு அப்பலோ மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனளிக்காமையினால் அங்கு மரணமானார்.

இதேவேளை, மும்மொழியிலும

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டது

(கொழும்பு)

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்றுக்காலை மீண்டும் திறக்கப்பட்டது.

அமெரிக்கத் தூதரகத்திற்கு அண்மித்துள்ள கட்டடத் தொகுதியில் இயங்கிவந்த யு.எஸ்.பொட் நிறுவனம் மற்றும் நூலகம் என்பனவும் இயங்கத் தொடங்கியுள்ளதாக அமெரிக்கத் தூதரக பேச்சாளர் கிறில் லோஸ் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் மூத்த உறுப்பினர் "சின்னபாலா" சுட்டுக்கொலை!

### வெள்ளவத்தையில் சம்பவம்



(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் மூத்த உறுப்பினரும், பிரசார செயலாளரும், தினமுரசுப் பத்திரிகையாளருமான 'சின்னபாலா' என அழைக்கப்படும் கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர் நேற்றுக் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் அலுவலகத்திற்குச் செல்லும்போது வெள்ளவத்தைப் பாமன்கடைப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதநபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையான இவர் ஊரெழுவைச் சேர்ந்தவர்.

இவரது சடலத்தில் 6 சூட்டுக்காயங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

பத்திரிகையாளரும், சிறுகதை எழுத்தாளருமான இவர் கடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் (12 ஆம் பக்கம் பார்க்க)



### நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும்

# மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும்!

## அரசுக்கும் புலிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாகத்தான் தீர்வுகாணவேண்டும். இதன் மூலம் நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தி மக்களின் இயல்புவாழ்வை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்வரவேண்டும். இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் இரு தரப்பையும் வலியுறுத்தியுள்ளது.**



## மடுத் தேவாலயத்தில் குற்றச்செயல்களில் ஈடுபட்டோர் கைது

(மன்னார்)

மடுத் தேவாலயத்தில் இடம்பெற்ற உற்சவங்களின்போது குற்றச்செயலகளில் ஈடுபட்ட 50 இற்கும் அதிகமானோரை தமி

**மூலம் நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தி மக்களின் இயல்புவாழ்வை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்வரவேண்டும். இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் இரு தரப்பையும் வலியுறுத்தியுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டக் குழுவிற்கும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையே நேற்று கிளிநொச்சியில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இச்சந்திப்பை அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் கிஷான் பிளையிங்கேற், ஒன்றிய இராஜதந்திரி ஒலேவில்சன்ஸ் மற்றும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் ஆகியோர் அடங்கிய ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டக் குழுவினர், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இச்சந்திப்பில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும் கலந்து கொண்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



(மன்னார்)

மடுத் தேவாலயத்தில் இடம்பெற்ற உற்சவங்களின்போது குற்றச்செயலகளில் ஈடுபட்ட 50 இற்கும் அதிகமானோரை தமிழீழ காவல்துறை கைதுசெய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற நற்கருணைப் பவனி வலம்வந்தபோதே அதிகமான களவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு மதுபானத்தை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட தமிழீழ காவல்துறைப் பணிமனையில் நீதிபதி மயூரன் முன்னிலையில் நிறுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், மேலும் 50 இற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பல்வேறு குற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டீசல் விலை அதிகரிப்பால் பஸ்கட்டணங்கள் உயரும்

அண்மையில் ஏற்பட்ட டீசல் விலை அதிகரிப்புக்காரணமாக தனியார், அரசாங்க பஸ் கட்டணங்களும், ரயில் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். மிகக் குறைந்தளவு பஸ் கட்டணமாக தற்பொழுது 3 ரூபா காணப்படுகிறது. கட்டண அதிகரிப்பு அமுல்படுத்தப்பட்டால் அக்கட்டணம் 4 ரூபாவாக அதிகரிக்கும். டீசல் விலை அதிகரிப்புக் காரணமாக பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு எழுத்துமூல உத்தரவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விடுத்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்தார்.(ச-06)

# படுகொலைச் சம்பவங்களினால் நாட்டின் அமைதி மோசமடைகிறது

## கண்காணிப்புக்குழுவின் துணைத் தலைவர் ஆதங்கம்

இலங்கையில் நடைபெறும் படுகொலைச் சம்பவங்களால் நாட்டின் அமைதிநிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் துணைத் தலைவர் ஹொக்றூவ் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் கொலை தொடர்பாக ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சம்பவங்கள் குறித்து புலன்விசாரணை செய்வதற்குப் போதிய வசதிகள் இல்லை. அத்துடன் இதனை பொலிஸார் செய்ய வேண்டும். எனினும், கொலைகளைச் செய்பவர்களை கண்டுபிடிப்பதற்குப் பொலிஸாரும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்துகொண்டிருப்பதாக நான் நம்புகின்றேன். ஆனாலும் அது அவ்வளவு இலகுவானதல்ல.

குறிப்பாக கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகள் உண்மையிலேயே மிகவும் மோசமானவை. அவை அங்குள்ள சூழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சிறப்புமிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் இன்று கொடியேற்றம்

நிகழும் தாரண ஆண்டு ஆவ ணித்திங்கள் முதலாம் நாளான



இன்று செவ்வாய்க்கிழமை பூர்வ பட்சமும் பூரநட்சத்திரமும் கூடிய நல்லோரையில் முற்பகல் 11.00 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத தின் கொடியேற்ற வைபவம் நடை பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெற்றுப் பூர்த்தித் தினமா கிய ஆவணித் திருவோணத்தில் 'துர்க்கா புஷ்கரணித்' தீர்த்தத் தடாகத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

ஆகமங்கள் கூறும் கோயில் வழிபாட்டில் விசேட நிமித்தத்தின் பொருட்டு நடைபெறும் நைமித்திய கிரியைகளில் வருடமொருமுறை நடைபெறும் மஹோற்சவம் மிகவும் சிறந்தது.

மஹோற்சவ காலங்களில் பக்தர்கள் புறத்தூய்மையுடன் அகத்தூய்மையையும் பேணி, விரதானுஷ்டானங்களில் ஈடுபட் டுத் தான தருமங்களைச் செய்து, ஆன்மீகச் சிந்தனையில் மூழ்கி மனம், மொழி, மெய் ஆகிய மூன் றினாலும் இறைவனை வழிபடுதல் ஆன்மீகப் பயணத்தில் அவர்கள் வெற்றி பெறுவதற்கு வழிசெய் கிறது.

**கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி**
யாழ்.பல்கலைக்கழகம்

**"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி**
**நாவிற்கும் மனத்துக்கும் நாடரிய பேரறிவாய்த்**
**தேவர்க்கும் முனிவர்க்கும் சித் தர்க்கும் நாகர்க்கும்**
**யாவர்க்கும் தாயாகும் எழிற் பரையை வணங்குவோம"**

இந்துமதத்தில் திரிமூர்த்திக் கொள்கை சிறப்புடையது. பிரமா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்தி களும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத் தொழில்களைச் செய்வதாகத் தத்துவ நூல்கள் கூறும்.

இம் முத் தொழில்களைச் செய்யும் மூவர்க்கும் முதற் பொரு ளாகவும், முத்தொழிலுக்கும் வித் தாகியும் நிற்பவள் சக்தி. சக்தி இன்றேல் பிரபஞ்சத்தில் எத் தொழிலும் இல்லை. அத்தகைய சக்தியின் ஆலயத்தில்,

**"சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யப்பட்டும்**
**பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த**
**கன்னங் கரிய குழலும் கண் பூன்றும் கருத்தில் வைத்துத்**
**தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே"**

என்று அபிராமிப்பட்டர் கண்ட தவ வடிவில் அன்னை துர்க்கா தேவி கொலுவீற்றிருக்கும் மங் கலக் காட்சி அடியார்களின் உள் ளத்திற் பக்திப்பரவசத்தை உண்டு பண்ணவல்லது.

அழகோடிணைந்தது பக்தி. அத்தெய்வீக அழகில் உள்ளம் இலயிக்க பக்தர்கள் உயர்ச் சாந் தியும் மகிழ்ச்சியும் பெற்று இஷ்ட சித்திகள் பெற்றுய்யும் வண்ணம் ஆலய வழிபாடு இடம்பெறுகிறது. படிப்படியாக உளப்பக்குவத்திற் கேற்ப இஷ்ட சித்திகளுடன், ஆன் மீக ஈடேற்றத்தையும் ஆலய வழி பாடு அருளுகிறது.

இகபர சித்திகளுக்குத் தள மாக விளங்கும் ஆலயம் மனித னது சமூக வாழ்வியக்கத்திற்கும் நடுநாயமாக விளங்கவேண்டும் என்ற வகையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் சமூகப் பணியாற்றித் தனக்கென ஓரிடத் தைப் பெற்றுள்ளது. எதிலும் உண்மை, நேர்மை, தூய்மை என்ற பண்பு களைக் கருத்திற்கொண்டு கவனமாகவும், கண்ணியமாகவும், சிரத்தையுடனும் கோயில் நிர் வாகம் இயங்கிவருவது பாராட டுக்குரியது. நிர்வாகத்தைத் தலைமையேற்று நடத்தும் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங் கம்மா அப்பாக்குட்டி அவர்களது ஆளுமையும் தலைமைத்துவப் பண்புகளும் இறுக்கமான நிர் வாகச் செயற்பாடுகளுக்குக் காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

அன்னையின் தலைமையின் கீழ் சிவாச்சாரியார்கள், அந்தணப் பெருமக்கள் சமயச் சடங்குகள், கிரியைகள், பூசைகளை பக்தி சிரத்தையுடன் நேரந் தவறாது நடாத்துவதும் அடியார்கள் கோயில ஒழுங்கு விதிகளுக்குட்பட்ட வகை யில் வழிபாடுகளில் ஈடுபடுவதும் மனங்கொளத்தக்க விடயங்கள்.

இத்தகைய சிறப்புக்களுடன், ஆன்மீக சாதனைகளுக்கு இட மாய் அமையும் துர்க்காதேவி ஆலயம் பல்வேறு சமூக அபிவி ருத்திகளிலும் தன்னை ஈடுபடுத் தித் தடம் பதித்துள்ளது.

சிறப்புக்கள் பலவற்றைத் தன் னகத்தே கொண்ட அன்னையின் ஆலய மஹோற்சவ காலங்களில் அடியார்கள் விரதமனுஷ்டித்து, ஆலய விதிமுறைகளுக்குட்பட்ட வகையிற் தம் பண்பாடு பேணி, இகபர சித்திகளைத் தாமும் பெற்று, மற்றவர்களும் பெற்றுய் யும் வண்ணம் வழிபாட்டில் ஈடுபடுவது விரும்பத்தக்கது.

## சிறுவிளம்பரம்
### தவறவிடப்பட்டுள்ளது

சுதுமலை வடக்கு மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த பொன்னன் புவனேஸ்வரன் என்பவரது A-008825317 என்ற இலக்கமுடைய ஓட்டுனர் உரிமம் (பாரவூர்தி) முகமாலை - யாழ்ப் பாணத்திற்கிடையில் கண்டிவீதி யில் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுப்போரை நாவலர் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அல்லது வலம்புரி பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (C/408)

## கூட்டுறவுப் பணிப்பாளர் (சா/த) பரீட்சையில் பத்து பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் இவ் வருடம் ஜனவரி மாதம் நடத்தப் பட்ட கூட்டுறவுப் பணிப்பாளர் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் பத்துப் பயிற்சியாளர் கள் சித்தியடைந்துள்ளார்கள்.

க.இராஜபுவனேஸ்வரன் 2ம் பிரிவிலும், க.கஜேந்தினி,க.கீதா, கோ.கௌரீஸ்வரி, க.சத்தியா, பா. சித்திரவடிவேல், வை.சுசீலா, ச.கௌடினி, கி.பவனமலர், த.குண சேகரம் ஆகியோர் 3ஆம் பிரிவி லும் சித்திபெற்றுள்ளனர். (வ)

## கீரிமலையில் தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் ஆடி அமா வாசை தினமாகிய நேற்று முன் தினம் படையினரின் உயர் பாது காப்பு வலயப் பகுதியிலுள்ள கீரிமலை தீர்த்தக்கேணியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக் கொண்டனர். (ச-8)

# வழக்கறிஞர்கள் போராட்டத்தில் தலையிட குடியரசுத் தலைவருக்கு வேண்டுகோள்

(சென்னை)

வழக்கறிஞர்கள் போராட்டத் துக்கு முடிவு காணும்படி குடியர சுத் தலைவர் அப்துல் கலாமிடம் தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி. கள் நேரில் வலியுறுத்தவுள்ளனர்.

தி.மு.க. எம்.பி.களின் கூட்டத் துக்குப் பின் அக் கட்சியின் தலை வர் கருணாநிதி இதைத் தெரிவித் துள்ளார்.

கோட்டை பழுதாகிவிட்டது என்று சாக்குப் போக்குக் கூறவே போராட்டத்தில் ஈடுபடும் சூழலை ஏற்படுத்துவது நல்லதல்ல என அவர் பதிலளித்தார்.

வழக்கறிஞர்களின் போராட் டம் காரணமாகத் தமிழகம் முழு வதும் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை நடைபெறாமல் ஸ்தம் பித்திருப்பதாக அவர் கூறினார். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் படி கருணாநிதி தலைமையிலான தேசிய முற்போக்குக் கூட்டணி எம்.பி.கள் குடியரசுத் தலைவர், பிரதமர், மத்திய சட்ட அமைச்சர் ஆகியவர்களை நேரில் சந்தித்து வலி யுறுத்துவார்கள் என்று தெரிவித் தார். சுதந்திரதின விழா பற்றிய கேள விக்குப் பதிலளித்த கருணாநிதி தலை மைச் செயலகத்தில் ஆண்டு தோறும் ஏற்றப்படவேண்டிய இடத்தில தேசியக் கொடி ஏற்றப்படவில்லை என்றார்.

கோட்டை பழுதாகிவிட்டது; புதிய கோட்டையைக் கட்டவேண்டு மென பதற்கான சாக்குப் போக்குத்தான் இது என்று அவர் கூறினார். (து)



கோட்டை பழுதாகிவிட்டது என்று சாக்குப் போக்குக் கூறவே தலைமைச் செயலகத்தில் வழக்க மான இடத்தில் தேசியக் கொடி ஏற்றப்படவில்லையென்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவால யத்தில் தி.மு.க. தலைவர் கருணா நிதி தலைமையில் அக்கட்சி எம்.பி.கள் கூட்டம் நேற்றுமுன் தினம் நடைபெற்றதையடுத்து கருணாநிதி செய்தியாளர்களுக் குப் பேட்டியளித்தார்.

வழக்கறிஞர்கள் போராட்டத் தில் ஈடுபடுவது நல்லதா என்ற கேள்விக்கு வழக்கறிஞர்கள்

தேசிய முற்போக்குக் கூட்டணி எம்.பி.கள் குடியரசுத் தலைவர்,

பதற்கான சாக்குப் போக்குத்தான் இது என்று அவர் கூறினார். (து)


## அரசியல் அதிகார மையமாக கருணாநிதி உருவாவதாகக் குற்றச்சாட்டு

(சென்னை)

மத்திய அமைச்சர் ஆஸ்கர் பெர்னாண்டஸ் தமிழக காங்கிரஸ் தலைமை அலுவல்கமான சத்திய மூர்த்திபவனுக்கு வந்தபோது உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் அனைவரும் ஒரே குரலில் கூறிய குற்றச்சாட்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியினதும் தி.மு.க.வினதும் தலைவரான கருணாநிதி பற்றித் தான் என 'த நியூ இந்தியன் எக்ஸ் பிரஸ்' பத்திரிகை செய்திவெளி யிட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவரோ, மத் திய அமைச்சரோ சென்னை வந் தால் அவர்கள் முதலில் செல்வது கோபாலபுரத்துக்கோ அல்லது அண்ணா அறிவாலயத்துக்கோ தான். அவர்கள் காங்கிரஸ் கட்சி யைக் கண்டுகொள்வதேயில்லை. கருணாநிதி ஒரு போட்டி அரசை நடத்திவருகிறார். காங்கிரஸ் அமைச்சர்கள் அவரிடம் பணிந்து கிடக்கிறார்கள் எனத் தமிழக காங் கிரஸ் பிரமுகர்கள் குமுறுவதாக அப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

மத்திய அமைச்சர்களாக இருக்கும் தமிழக எம்.பி.கள் 12 பேரும் தமிழக வளர்ச்சிக்கு எது வும் செய்வதில்லை என்றும் காங் கிரஸ் பிரமுகர்கள் தெரிவிப்பதா கவும் பத்திரிகைச் செய்தி கூறுவ தாகத் தெரிகிறது. (து)



**இந்தியாவுக்கான இந்திய ஹைகமிஷனராகப் பொறுப்பேற்க வுள்ள நிருபமா ராவ் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார்.**



# இந்தியச் செய்திகள்

## கிராம மேம்பாட்டுக்கு 200 கோடி ரூபா

(சென்னை)

கிராமங்களில் சமூக மேம் பாட்டுப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் ஊராட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் 200 கோடி ரூபா மதிப்பீட்டிலான 'நமது கிராமம்' என்ற புதிய திட்டத்தை சுதந்திரத் திருநாளில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடக்கிவைத்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோட்டைக்கு வெளியே நடைபெற்ற சுதந்திரதின விழாவில் தேசியக் கொடியை ஏற்றிய பின் முதல்வர் இதனைத் தெரிவித்தார்.

அனைத்துக் குழந்தைகளையும் தவறாது பள்ளியில் சேர்ப்பது, அவர் கள் படிப்பைப் பாதியில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கற்கவழி செய்வது, பெண் குழந்தைகளை கருவிலேயே மாய்க்கும் செயலை அறவே நீக்குவது,வறுமை ஒழிப்பு, கிராமத் துப்புரவு, பொதுச் சுகாதா ரம் முதலியன சமூகமேம்பாட்டு அம்சங்களுள் அடங்கும்.

அந்தந்தக் கிராம மக்களின்



முழுமையான ஈடுபாட்டோடு சிறப் புடன் இப்பணிகளைச் செயல்படுத் தும் ஊராட்சிகளுக்கு ஊக்க மளிக்கும் வகையில் இணைப்புச் சாலைகள், உட்புற சிமெந்துச் சாலைகள், தெருவிளக்குகள், பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகி யன இத்திட்டத்தின் கீழ் செய்து தரப்படுமெனத் தெரிகிறது. (து)

## ம.ம.மு.தலைவர் சந்திரசேகரன் கூறித்தான்

# புலிகளைச் சந்திக்க வேண்டும் என்றநிலை எமக்கு இல்லை என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும் ஜாதிகஹெல உறுமயவும் வடபகுதிக்கு நேரில் விஜயம்செய்து, போரினால் பாதிக்கப்பட்ட பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அறிந்து கொள்ள வேண்டும் என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விடுததுள்ள அழைப்பினை தாம் ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி.வடபகுதி மக்களின் நலன்கள் நிலைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு நேரில் விஜயம் செய்யுமாறு புலிகள் பகிரங்கக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

புலிகளின் இக் கோரிக்கை வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இதுகுறித்து ஆராய்ந்த பின்னரே இறுதிமுடிவுக்கு வர முடியும். புலிகளால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்ற தீர்மானத்திற்கு நாம் விரைவில் வருவோம் ஆனால் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் இதுகுறித்து எமக்கு எதுவித ஆலோசனைகளையும் வழங்கத் தேவையில்லை.

காரணம் சந்திரசேகரன் கூறித்தான் நாம் புலிகளைச் சந்திக்க வேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லை எனவும் எமக்குச் சுயமாகச் சிந்தித்துச் செயற்பட தெரியும் எனவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இதுகுறிததுக் கருத்து வெளியிடடுள்ள ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினா உடுவே தம்மாலோக தேரர்,

வடபகுதி மக்களின் வாழ்க்கை நிலையையும், அவர்களினது மன நிலைமையும் அறியும பொருட்டு வடபகுதிக்கு நேரில் விஜயம் செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்க அழைப்பை விடுத்துள்ள போதிலும் அது குறித்து அவர்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும் எனத் தெரிவித்தா (ப-121)

## வட.இந்து மகளிர் மாணவி முதலாமிடம்

(பருத்தித்துறை)

வர்த்தக நுகர்வோர் அலுவல்கள அமைச்சின் இலங்கை புத்தாக்குநர்களின் ஆணைக் குழுவால் அகில இலங்கை ரீதியில் நடாததப்பட்ட ‘பொருளாதார அபிவிருத்தியில் புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு’ என்ற தலைப்பிலான ஆங்கில கட்டுரைப் போட்டியில் வட இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி சி.சுதாசினி (ஆண்டு 13) முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

புதிய கண்டுபிடிப்புக்களை இலங்கைக்குள் பிரபல்யப்படுத்தல், புதிய கண்டுபிடிப்புகள், தொடாபாக இலங்கை மக்கள் மத்தியிலுள்ள அறிவை மதிப்பீடுசெய்யும் நோக்கிலேயே இப் போட்டிகளை இலங்கை புத்தாக்குநர்களின் ஆணைக்குழு நடாத்தியமையும் குறிப்பிடத் தக்கது. (ப-52)

# இலங்கையின் பொருளாதார நிலை பற்றி உலகவங்கி சகல எம்.பிக்களுக்கும் விளக்கம்

(கொழும்பு)

உலகவங்கி இலங்கையின் பொருளாதார நிலைமைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பியுள்ளது.

அத்துடன் இந்த அறிவுறுத்தல்களுடன் நாடாளுமன்ற உறுபபினர்களுக்குப் புத்தகம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை, பொருளாதார நிலமை அதனை மேம்படுத்த உலக வங்கி மேற்கொண்டுள்ள முயற்சிகள், அத்துடன் முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசின் காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்டத்தில் காணப்படும் நன்மைகள் என்பன இப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைக்கக் கூடிய திட்டம் தொடர்பாகவும் அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் பாராளுமன்ற உறுபபினர்களுக்கு உலக வங்கி இவ்வாறு கடிதம் அனுப்பியது இதுவே முதற்தடவையாகும். (க-8)

## யுத்த அனர்த்தம் காரணமாக

# வருமானமீட்டுவோரை இழந்த 12,625பேர் வறுமையின் பிடியில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வருமானம் ஈட்டியவர்களை இழந்து 12,625 பேர் வறுமையில் தவிப்பதாக கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இக்குடும்பங்கள் தங்களுக்கு வருமானம் ஈட்டித் தநத கணவன் - மனைவி, பிள்ளை, சகோதரம் என்று பலதரப்பட்ட பிரிவினர்களை யுத்த அனர்த்தங்களினால் இழந்திருக்கின்றார்கள்.

இதன் பிரகாரம் வெல்லாவெளி பிரதேசத்தில் 1,835பேரும், மண்முனை வடக்கில் 1,644 பேரும், செங்கலடிப் பிரதேசத்தில் 1,475பேரும், களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் 1,311 பேரும், கோறளைப்பற்று மேற்கு பிரதேசத்தில் மிக குறைந்த தொகையினராக 236 பேரும் உள்ளனர்.

(க-121)

## பல்வேறு நாடுகளினதும்

### சமாதானச் சூழலைக் கண்டறியச்சென்ற இலங்கைக் குழுவினர் நாடுதிரும்பினர்

(கொழும்பு)

பல்வேறு நாடுகளின் சமாதானச் சூழ்நிலைகளைக் கண்டறிவதற்காக இலங்கையில் இருந்து சென்ற குழுவினர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இந்தக் குழுவில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவுள்ளிட்ட 5 அமைச்சர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்தக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா போன்ற நாடுகளுக்கு தமது நோக்கத்திறகான விஜயத்தினை மேற்கொண்டு சென்றனர்.

அங்கு இலங்கைக்கு ஏற்புடைய சமாதானச் சூழ்நிலை தொடர்பாகவும், அதற்காக எடுக்க வேண்டிய முனைப்புக்கள் சம்பந்தமாகவும் ஆராய்ந்துள்ளனர்.

(க-121)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தவணைக் கொடுப்பனவில் வாகனம்

## மில்றோய் பெர்னாண்டோ அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினாகளுக்கு இலகுத் தவணைக் கொடுப்பனவுகளில் வாகனங்களை இறக்குமதி செய்து வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுளள சுமார் ஆயிரம் வாகனங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குரிய வாகனங்களைத் தெரிவு செய்யலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஏற்கனவே கடன் அடிப்படையில் இந்தியாவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடாபில், உரிய கொடுப்பனவை செலுத்தாதவர்களிடம் இருந்து வாகனங்கள் மீளபெறப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7,121)

# அரசாங்கத் திணைக்களங்களில் நிலவும் 18,666 வெற்றிடங்களையும் நிரப்ப உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## துரைரட்ணசிங்கம் எம்.பி.ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 45 அரசாங்கத் திணைக்களங்களில் 60ஆயிரத்து 34 அலுவலர்களுக்கு ஆளணித் தேவை நிலவுகின்ற போதும் தற்போது 41 ஆயிரத்து 368பேரே கடமையாற்றுவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா க.துரைரட்ண சிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மீதமாகவுள்ள 18ஆயிரத்து 666வெற்றிடங்களையும் உரிய முறையில் நிரப்புவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

1997ஆம் ஆண்டு 51ஆயிரத்து 748பேருக்கும், 2000ஆம் ஆண்டு 8ஆயிரத்து 286பேருக்கும்ஆளணித் தேவை மதிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதான சூழ்நிலை நிலவிவருகினற நிலையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இதனை செவ்வனே நிறைவேற்றுவதற்கு உரிய திணைக்களங்களில் அதிகாரிகள் தேவை நிரப்பப்படவேண்டும்.

இயல்பான நிலையில் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுவதன் மூலம வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அபிவிருததியை துரிதமாக முன்னெடுத்துச் செல்லலாம் எனவும் அந்தக் கடிதத்தில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# எரிபொருள் விலையேற்றம் தற்காலிகமானதே!

அண்மையில் எரிபொருட்களின் விலை அதிகாரிப்பானது தற்காலிகமானது என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறையும்போது அதன பயனை மக்கள் அனுபவிபபார்கள். எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதால் உணவு உட்பட அநேனகமான பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடும்.

எரிபொருட்களின் விலை அதிகரிபபு போக்குவரத்து கட்டண அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. இதனைத் தவிாக்க முடியாது என அமைச்சா மேலும் தெரிவித்தார்.

(க-7,121)

# ஹக்கீமின் கல்குடா விஜயத்திற்கு மக்கள் கடுமையான எதிர்ப்பு

கல்குடாத் தொகுதிக்கு நேற்று முனதினம் விஜயம் செய்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கமிற்கு அங்குளள முஸ்லிம் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஓட்டமாவடி நகரம் உட்பட பெரும்பாலான முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடபபடடு, கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்ட நிலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு இதனால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்குடாத் தொகுதி முஸ்லிம்களின் சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ரவூப்ஹக்கீமின் தன்னிச்சையான போக்கினைக் கொண்டிருப்பதுடன், தலைமைப் பதவியில் இருந்து அவர் உடனடியாக விலகவேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

காலை 9.00 மணிக்கு அங்கு விஜயம் செய்யவிருந்த ரவூப் ஹக்கீம் சுமார் 4 மணித்தியாலங்கள் தாமதித்துக் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கல்குடாவிற்கு விஜயம் செய்ததுடன், ஆதரவாளர்களினால் ஓட்டமாவடி, நீராவோடை, வாழைச் சேனை போன்ற பகுதிகளுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இதற்கு பொலிஸாரும், படையினரும் கடும் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

(ப-121)

# தே.அ.அ.கட்டாயமாக்கப்பட்டால் வாக்களிப்பு உரிமை பறிபோகும்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகள் வாக்காளர்களிடத்தில் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டத்தினால் மலையக தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமை பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளது.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.சி.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

வருங்காலத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது வாககாளர்கள் தமது தேசிய அடையாள அடடைகள் வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருப்பதால் மலையகத் தமிழ் மககள் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுத்த பின்னர், திட்டத்தினை அரசாங்கம் அமுல் படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-7,08)

# யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டி முடிவுகள்

**யாழ். கல்வி வலயக் கல்விப் பணிமனையினால் நடத்தப்பட்ட சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டிகளின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:**

### பிரிவு 6-7

**1ஆம் இடம்**: சி.நிரோஜன்-யா/கந்தர்மடம் சைவப்பிரகாச.

**2ஆம் இடம்**: ச.றதீபன்-யா/கொக்குவில் நாமகள் வித்.

**3ஆம் இடம்**: ஆ.கௌதமி-யா/கொக்குவில் நாமகள் வித்.

**4ஆம் இடம்**: செ.தஸ்மலர்-யா/நல்லூர் தெற்கு் விக்னேஸ்வரா.

**5ஆம் இடம்**: கி.றபினஹுா-யா/கலட்டி மெ.மி.த.க.

### பிரிவு 8-9

**1ஆம் இடம்**: உ.நிரோசன்-யா/கொக்குவில் நாமகள் வித்.

**2ஆம் இடம்**: சி.ராஜசுரெஸ்-யா/பத்தமேனி இரட்ணேஸ்வரி.

**3ஆம் இடம்**: மோ.கபில்-யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா.

**3ஆம் இடம்**: க.ராஜ்கண்ணா-யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா

**5ஆம் இடம்**: வ.அகல்யன்-யா/நீர்வேலி சீ.சீ.த

### பிரிவு 10-11

**1ஆம் இடம்**: வ.றமேஸ்குமார்-யா/கொக்குவில் நாமகள் வித்.

**2ஆம் இடம்**: ந.தீபன்-யா/கொக்குவில் நாமகள் வித்.

**2ஆம் இடம்**: சி.சறோஜன்-யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி.

**4ஆம் இடம்**: ந.கார்த்திகா-யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா

**5ஆம் இடம்**: த.கயூரன்-யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா

### பிரிவு 6-7

**1ஆம் இடம்**: பி.அன்றூபன்-யா/புனித ஜோசப் வித்.

**2ஆம் இடம்**: கி.சதூசா-யா/சன்மார்க்க ம.வி.

**2ஆம் இடம்**: சோ.ஜங்கரன்-யா/ சரஸ்வதி வித்.

**4ஆம் இடம்**: தே.றோஜிதா-யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.

**4ஆம் இடம்**: செ.இராஜசிருங்காரி-யா/ஊரெழு கணேசா வித்.

### பிரிவு 8-9

**1ஆம் இடம்**: ச.துளசிகாந்தன்-யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.

**2ஆம் இடம்**: யோ.பிரியதாசன்-யா/வாதரவத்தை விக்னேஸ்வரா

**3ஆம் இடம்**: கே.விஜயகுமார்-யா/ நல்லூர் இந்து த.பெ.பா.

**4ஆம் இடம்**: வி.றை.ஜீவகுமார்-யா/ கோப்பாய் ம.வித்.

**4ஆம் இடம்**: ச.சத்தியாஜினி-யா/சரவணபாவனந்தா வித்.

### பிரிவு 10-11

**1ஆம் இடம்**: ந.மனோலயம்-யா/வண்.நாவலர் ம.வித்.

**2ஆம் இடம்**: பு.றசிதா- யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

**3ஆம் இடம்**: த.அனுராஜ்- யா/சரஸ்வதி வித்.

**3ஆம் இடம்**: ஜீ.ந.பிரதீபன்- யா/வண்.நாவலர் ம.வித்.

**5ஆம் இடம்**: கி.நிசாந்தன்- யா/புனித ஜேம்ஸ் ம.வித்.

### பிரிவு 12-13

**1ஆம் இடம்**: சி.வநோதா-யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

**2ஆம் இடம்**: சி.சுகந்தன்- யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

**3ஆம் இடம்**: எஸ்.சதீசன்- யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

**3ஆம் இடம்**: ச.தேனகா- யா/கோண்டாவில் இராமகிஷ்ணா ம.வித்.

**5ஆம் இடம்**: சி.வக்ஷி- யா/கோண்டாவில் இராமகிஷ்ணா ம.வி.

### பிரிவு 6-7

**1ஆம் இடம்**: யோ.பிரணவன்-யா/நடராஜா இராமலிங்கம் வித்.

**2ஆம் இடம்**: பு.நிலாந்தி- யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

**3ஆம் இடம்**: லோ.கஜிந்தன்-யா/ கோப்பாய் நாவலர் வித்.

**4ஆம் இடம்**: அ.அகிலா- யா/நாவாந்துறை றோ.க.த.க.பா.

**4ஆம் இடம்**: அ.மேரி அயரின்-யா/புனித ஜேம்ஸ் மகளிர் வித்.

### பிரிவு 8-9

**1ஆம் இடம்**: மா.றேகாதீபன்-யா/நடராஜா இராமலிங்கம் வித்.

**2ஆம் இடம்**: க.சிந்துஜன்- யா/முத்துத்தம்பி ம.வித்.

**3ஆம் இடம்**: அ.விநோத்- யா/நாவாந்துறை றோ.க.த.க.

**4ஆம் இடம்**: கு.இராஜேஸ்வரி-யா/கோண்டாவில் இந்து ம.வித்.

**5ஆம் இடம்**: ந.சிரோசிகா- யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

### பிரிவு 10-11

**1ஆம் இடம்**: ப.பபிலன்-யா/வைத்தீஸ்வரக் கல்லூரி.

**2ஆம் இடம்**: யோ.நிரோஜா-யா/புனித திரேசாள் மகளிர் வித்.

**3ஆம் இடம்**: ந.பிரதீபன்- யா/வைத்தீஸ்வரக் கல்லூரி.

**3ஆம் இடம்**: தே.லமிர்தா- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

**5ஆம் இடம்**: சி.பிரோஹான்-யா/வைத்தீஸ்வரக் கல்லூரி.

### பிரிவு 12-13

**1ஆம் இடம்**: பூ.றாஜ்விநோத்-யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

**2ஆம் இடம்**: த.றஜிந்தன்- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

**3ஆம் இடம்**: ம.அன்ரனஸ்-யா/ புனித சாள்ஸ் ம.வித்.

**4ஆம் இடம்**: ப.தயாபரன்- யா/பெரியபுலம் ம.வித்.

**5ஆம் இடம்**: கே.ஜனார்த்தனன் - யா/வைத்தீஸ்வரக் கல்லூரி.

### பிரிவு 6-7

**1ஆம் இடம்**: ஆ.சுபகா-யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**2ஆம் இடம்**: பா.நர்த்தகி- யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**3ஆம் இடம்**: வி.சதுர்சன்- யா/கொக்குவில் இந்து கல்லூரி.

**3ஆம் இடம்**: சி.சுகன்ஜா- யா/கொக்குவில் இந்து கல்லூரி.

**5ஆம் இடம்**: வி.யூட்சன் வினிஸ்- யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

### பிரிவு 8-9

**1ஆம் இடம்**: ஆர்.கோகுலவாசன்-யா/இந்து கல்லூரி.

**2ஆம் இடம்**: ஜெ.ஜெனோஜின்-யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**3ஆம் இடம்**: ஞா.திவ்வியா ஆன்சி- யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்

**4ஆம் இடம்**: ச.தனுஷன்- யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**5ஆம் இடம்**: தி.செல்வகணேஸ்-யா/கொக்குவில் இந்து கல்லூரி.

### பிரிவு 10-11

**1ஆம் இடம்**: வ.யோகதீஷன்-யா/இந்துக் கல்லூரி.

**1ஆம் இடம்**: ப.தர்சானந்த்-யா/மத்திய கல்லூரி.

**3ஆம் இடம்**: கி.திநோஷன்-யா/ இந்துக். கல்லூரி.

**4ஆம் இடம்**: ச.ந.திபேதிஜஷ்-யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.

**5ஆம் இடம்**: அ.ஜோய்டனிசியஸ்- யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

### பிரிவு 12-13

**1ஆம் இடம்**: செ.மதுராந்தகா-யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**2ஆம் இடம்**: த.வேணுகானன்-யா/பரியோவான் கல்லூரி.

**3ஆம் இடம்**: க.இளவஞ்சி-யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**4ஆம் இடம்**: கே.வரோதயன்-யா/ இந்துக் கல்லூரி.

**5ஆம் இடம்**: செ.மயூட்சன்- யா/கனகரத்தினம் ம.ம.வித்.

(ப-5)



சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டிருந்தவர்களைப் படத்தில் காணலாம்.

## வருடாந்த உற்சவம்

(பளை)

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ப-97)

## விண்ணப்பம் கோரல்

2004/2005 கல்வியாண்டிற்கான கல்வி முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கான பயிற்சியாளர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை அதனை நடாத்தும் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கோரியுள்ளார்.

எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை அடிப்படையில் இடம்பெறும் இக்கற்கை நெறியல் அனுமதிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவைகளைச் சேர்ந்தோர் விண்ணப்பிக்கலாம். இதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 9ஆம் திகதி ஆகும். முழுநேர வதிவிடக் கற்கை நெறியான இது மீபேயில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவவாண்மை அபிவிருத்தி நிலைய்த்தில் நடத்தப்படும்.

(ப-7)

# பொ.ஐ.மு.அரசிற்கிருந்த பலம் ஐ.ம.சு.மு.அரசிற்கு கிடையாது

## அமைச்சர் ஜெயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

1994இல் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது பல சிறிய கட்சிகளை கூட்டு இணைத்திருந்தோம். அப்போது நாம் தொடர்ந்து 6 வருடங்கள் ஆட்சி செய்யக்கூடியதாக இருந்தது.

ஆனால் தற்போதைய கூட்டு அரசாங்கத்திற்கு இந் நிலைமை சாத்தியம் இல்லை என்பது வெளிப்படையானது என தகவல் தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் நலன்களை பார்த்துக் கொள்வது மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார,சமூக பிரச்சினைகளையும் சமாளிக்கவேண்டியது அரசின் கடமை.

இவற்றில் அரசாங்கம் பிரச்சனைக்குள்ளாகிவிட்டால் அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டுவிடும்.

அத்துடன், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பை காட்டிக் கொண்டிருப்பார்கள்.

எனவே அரசாங்கம் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டுமெனில், கூட்டணிக்குள் எழும் முரண்பாடுகளை ஜே.வி.பி. பேசி சமரசம் செய்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி நாட்டினை முன்னேற்றும் ஒரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது உண்மைதான்.ஏனெனில் அதற்குப் பதிலாக பெரும்பாலானவர்கள் தங்கள் சொந்த லாபத்தையே முதன்மைப் படுத்து கிறார்கள்.

அத்துடன், இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையானது அரசிற்குப் பெரும்தலையிடியாக உள்ளது.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் அவசியம் என்பதை என்றோ ஏற்றுக் கொண்டுள்ளது என்றார்.

(ப-6)

# மருந்துப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டே புள்ளே தெரிவித்துள்ளார்.

மருந்துப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுவருவதாக பொது மக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே அரசு இத்தகைய தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதேவேளை, மேற்குலக நாடுகளில் இருந்து 6 ஆயிரம் வகையிலான மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும், அவற்றில் 600 வகையான மருந்துகள் அத்தியாவசியமானவை எனவும் ,

இதனால் சம்பந்தப்பட்ட மருந்து இறக்குமதியாளர்களுடன் விரைவில் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க,60)

## பிரதேச முன்பள்ளி விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் நடாத்தப்படும் பருத்தித்துறைப் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி மேற்பார்வையாளர் திருமதி ரீ.இரவீந்திரன் தலைமையில் தம்பசிட்டி மாயக்கை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் எஸ்.வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலன், யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி வலய முன்பள்ளி இணைப்பாளர் செல்வி பி.சுதாஜினிதேவி உட்படப் பல பிர முகர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (07-52)

# ஷியாத் தீவிரவாதிகளுடனான அமைதி பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன


## நஜாப் மீது உக்கிர தாக்குதலை தொடர முடிவு

(நஜாப்)

ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் ஷியாப் பிரிவுத் தவிரவாதிகளுக்கும் அமெரிக்க கூட்டுபபடையினருக்கும் இடையே இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்திருப்பதாக பேச்சுவார்த்தைக்கு தலைமை வகித்த ஈராக் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மொ.:.பாக் அல்-உபாய் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண தீவிரவாதிகள் தம்வசமுள்ள ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டபோதும்,அதற்குத் தீவிரவாதிகள் இணங்காததுடன்,

தாம் ஆயுதங்களை ஒப்படைப்பதாயின் நஜாப் நகரில் இருந்து அமெரிக்கப்படைகள் முற்றாக வெளியேற வேண்டும் எனவும் தமது தரப்புப் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் தீவிரவாதிகள் வலியுறுத்தினர்.



இதன் காரணமாகவே இப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளபோதும்,

அரசாங்கத்தின் தரப்பிலிருந்து பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்கிய அல்-உபாய் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தமைக்கான காரணத்தைக் கூறமறுப்புத் தெரிவித்து விட்டார்.

இந்நிலையில் கடந்த 5ஆம் திகதி வரை நஜுப்பில் இடம்பெற்றுவந்த உக்கிர மோதல்கள், இருதரப்பினருக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதாக கடந்த 13ஆம் திகதிமுதல் ஓய்வுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் இருதரப்பினர்க்குமிடையேயான பேச்சுகள் தோல்வயில் முடிவடைந்ததையடுத்து, நஜாப் நகர் மீதான தாக்குதல்களை அமெரிக்கப் படைகள் மேலும் தீவிரப்படுத்தப்படவுள்ளதாக ஈராக் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அல்-உபாய் தெரிவித்துள்ளார். (ப-யே)

## WORLD NEWS
## உலக தரிசனம்

# பாகிஸ்தானியரிடையே முஷாரப் செல்வாக்கிழந்து வருகிறார்

## ஸ்ட்ராட்:.பார் அமைப்பு தகவல்

(இஸ்லாமபாத்)

அமெரிக்காவிற்கு ஆதரவாகச் செயல்பட்டுவருவதால் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் வேகமாக தனது செல்வாக்கை இழந்து வருவதாக சர்வதேச அரசியல் இராணுவ நிலவரங்களைத் துல்லியமாக ஆய்வு செய்து எதிர்கால போக்குக்களை தெரிவிக்கும் வல்லுநர் அமைப்பான ஸ்ராட்.:.பார் தெரிவித்துள்ளது.

அமொிக்க நிர்வாகத்தின் சிம்மசொப்பனமாக இருந்து வரும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பை ஒழித்துக்கட்ட அமெரிக்காவின் எஸ்.பி.ஐ.யுடன் இணைந்து முழு அளவிற்கு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதனால் முஷாரப் பாகிஷ்தானில் அவர் செல்வாக்கை இழந்து வருவதாகத் தெரியவருகின்றது.

அமெரிக்க அதிபர் தேர்தலில், ஜோர்ஜ் புஷ் மீண்டும் வெற்றிபெற பாடுபட்டு வரும் முஷாரப், அமெரிக்காவில் வாழும் பாகிஸ்தானிய அமெரிக்கர்கள் புஷ்விற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று படாதபாடுபட்டு வருகிறார் என்று பாகிஸ்தானின் மூத்த தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க் ஆதரவாளர் என்ற முத்திரையால் தங்களுடைய செல்வாக்கு சரிந்து வருவதை தடுத்து நிறுத்த என்ன செய்வது என்று தெரியாமல் முஷராப் நிர்வாகம் ஆலோசித்து வருவதாக ஸ்ட்ராட் .:.பார் மேலும் தெரிவித்துள்ளது. .(ப-யே)

# இந்தோ. கப்பலில் தீவிபத்து
## 12 பேர் பரிதாப மரணம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய கப்பல் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதில் 12பேர் பலியாயினர். இந்தோனேஷியாவில் சுலாவெசி மாகாணத்தில் பெலாங் கடலில் 45பேரை ஏற்றிச் சென்ற சிறிய கப்பல் இன்ஜினில் திடீரென தீ பிடித்தது. இந்தத் தீ கப்பல் முழுவதும் பற்றி எரியத் தொடங்கியது. அருகே சென்ற படகில் இருந்த மீனவர்கள் கப்பலில் இருந்த பலரைக் காப்பாற்றினர். எனினும் 12பேர் கடலில் குதித்து நீந்தத் தெரியாமல் இறந்து விட்டனர். (ப-யே)



பிரான்ஸ் நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களின் புனிதத்தலமான லூர்த்ஸ் நகரில் நோயாளிகளுக்கு ஆசி வழங்குகிறார் போப்பாண்டவர் 2 வது ஜோன் போல்.

# அணு உலைகளை மூடிவிட முடிவு

(டோக்கியோ)

ஜப்பானிலுள்ள கான்சாய் மின் உற்பத்தி நிறுவனம் தங்களது அனைத்து அணுமின் உலைகளையும் படிப்படியாக மூடிவிட முடிவு செய்துள்ளது.

ஜப்பான் நாட்டில் சிறிதும் பொதுமாக 52 அணுமின்நிறுவனங்கள் உளளன. நாட்டிற்குத் தேவையான மூன்றில் ஒரு பங்கு மின் சக்தியை இந்த அணுமின் நிறுவனங்கள் வழங்குகின்றன.

டோக்கியோ நகரில் மேற்குப் பகுதியில் கான்சாய் மின் உற்பத்தி நிறுவனத்தில் மிஹாமா அணுமின் நிலையம் உள்ளது. இந்த நிலையததில்உள்ள பைபலைனில்ஏற்பட்ட உடைப்பு வழியாக கதிரி யக்கமில்லாத வாயு கசிந்ததில் நான்கு ஊழியர்கள் இறந்தனர்.

இதனையடுதது இந்தநிறுவனத்தின சார்பில் அமைக்கப்பட்டுள்ள 11 அணு உலைகளிலும் சோதனை நடத்துமாறு அரசு உத்தரவிட்டது. விபத்து நடத்த மிஹாமா அணு உலை ஏற்கனவே மூடப்பட்டிருந்தது. அந்த சமயத்தில் தான் வாயு கசிவு ஏற்பட்டுள்ளது. பராமரிப்புப் பணிக்காக ஏற்கனவே இரண்டு அணு உலைகளும விரைவில் மூடப்பட்டுள்ளன. விபத்து நடநததையொட்டி தங்கள் நிறுவனத்தின் அனைத்து அணு உலைகளும் விரைவில்மூடப்பட்டும் எனவும் பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது என்றும் கான்சாய் நிறுவனம அறிவித்துள்ளது. (யே)



அமெரிக்காவின் இயோவா மாகாணத்தின் சியக்ஸ் நகரில் கடந்த சனிக்கிழமை நடத்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அழுகின்ற குழந்தையைத் தூக்கி ஆறுதல் படுத்த முயலுகிறார் அதிபர் ஜோர்ஜ் புஷ். குழந்தைக்குத் தெரியுமா அவர் அதிபர் என்பது?

# ஸ்பெயினுக்குள் ஊடுருவ முயன்ற ஆபிரிக்கர்கள் 300 பேர் கைது

(மாட்ரிட்)

ஸ்பெயின் நாட்டுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவ முயன்ற 300 ஆபிரிக்கர்களை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்பெயின் நாட்டில் உள்ள கானரி தீவுகளின் கடற்கரையில் வந்து நின்ற 4படகுகளில் 143 ஆபிரிக்க நாட்டவர்கள் இருந்தனர். இவர்களை ஸ்பெயின் பொலிஸார் கைது செய்ததோடு, படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

அதேபோல கிரானடா மாகாணப்பகுதியில்,ஊடுருவ முயன்ற ஐந்து படகுகளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். அவற்றில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இதுதவிர,அல்மேரியா மாகாணத்திற்கு அருகில் உள்ள மெடி டெர்ரனியன் பகுதியில் வந்திறங்கிய படகை பொலிஸார் சோதனையிட்டனர். அதில்,34 அகதிகள் இருந்தனர். அவர்களையும் ஸ்பெயின் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ப-07)

# தீவிரவாதிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்த குவைத் முடிவு

(பக்தாத்)

ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு கடந்த 19 நாட்களாக பிணைக் கைதிகளாக உள்ள 3 இந்தியர்கள் உட்பட 7 பேரை விடுவிக்க நடந்த முயற்சிகளில் ஏற்பட்ட பின்னடைவையடுத்து தீவிரவாதிகளுடன் நேரடியாக பேச குவைத் நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

குவைத் கல்.:.ப் போக்குவரத்து நிறுவனத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி வந்த ஈராக் பழங்குடியினர் தலைவர் ஷேக் இஷாம் அல்துலாய்மி பேசிவந்த நிலையில் திடீரென்று தீவிரவாதிகள் மேலும் பணம் கேட்டு புதிய நிபந்தனை விதித்தனர்.

இதனால் பிணைக் கைதிகள் விடுதலையில் முட்டுக்கட்டை ஏற்பட்டது. தீவிரவாதிகள் கடைசிக்கட்டத்தில் புதிய நிபந்தனையை விதித்திருப்பதன் மூலம் அல்துலாய்மியின் நடவடிக்கைகளுக்கு தாங்கள் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதனை அவர்கள் நிரூபித்துள்ளதாகவும் எனவே அல்துலாய்மியை தவிர்தது விட்டு நேரடியாக பேசும் முடிவு எடுத்துள்ளதாதக குவைத் நிறுவனத்தின் பேச்சாளரான அபுஜைனே கூறியுள்ளார்.

ஆனால் இந்திய அயலுறவுத்துறை துலாய்மியின் முயற்சிகளின் மீது தொடாந்தும் நம்பிக்கை வைத்துளளது. பிணைக கைதிகளை விடுவிப்பது தொடர்பாக தீவிரவாதிகளிடமிருந்து இறுதி வார்த்தைக்காக துலாய்மி காத்திருப்பதாகவும் அதன் அடிப்படையில் நிலைமை என்னவென்பது புலனாகும் எனறும்அயலுறவு அமைச்சகம் எதிர்பார்த்துக் காத்திருக கிறது. (யே)

## ரோபோ, ரிமோட் உதவியுடன்
# கடலுக்கு அடியில் சிகிச்சைக்கூடம் அமைக்க நாசாநிலையம் திட்டம்

(வாஷிங்டன்)

கடலுக்கு அடியில் ஆய்வுகூடத்தில் உள்ள நோயாளிக்கு டெலிமெடிசின முறையில் சிகிச்சை அளிக்கும் சோதனையை எதிர்வரும் ஒக்டோபரில் நடத்த நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய கடலியல் மற்றும் சுற்றுச்சூழல் நிர்வாகத்தின் கீழ் கடலுக்கடியில் நிரந்தர ஆய்வுக்கூடம் ஒக்டோபரில் அமைக்கப்படுகிறது. உலகிலேயே கடலுக்கடியில் அமைக்கப்படும் முதலாவது நிரந்தர ஆய்வுக் கூடம் இதுவாகும்.

எதிர்காலத்தில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்துக்குச் செல்லும் விண்வெளி வீரர்களுக்கு அவசர சிகிச்சை தேவைப்படும் போது டெலிமெடிசின் முறையில் ரிமோட் கண்ட்ரோல் மூலம் ரோபோட்டுகளின் உதவியுடன் அறுவை சிகிச்சை அளிக்க முடியுமா என்பதைக் கண்டறியவே இச் சோதனை நடத்தப்படுகிறது என்று நாசா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது. (ப-யே)

# தமிழரின் இசைவழிவமான பண்ணிசை

(நேற்றைய தொடர்ச்சி)

சங்கப் பாடல் தொகுதிகளில் காலத்தாற் பிற்பட்டதெனக் கருதப் படும் பரிபாடலின் இசை வகுப்புக் குறிப்பில் "பண்ணும் பாலை யாழ்" என்ற சொற்றொடர் பயில்கின்றது. மேலும் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன யாழை வாசிக்க வேண்டுமென்ற முறையும் சங்க காலத்தே இருந்து வந்ததைப் பின் வரும் மதுரைக் காஞ்சிப் பாடல் சுட்டுகின்றது.

'யாம நல்யாழ் நாப்பண' (மதுரைக்காஞ்சி) இவற்றில் இருந்து யாம யாழென்று ஒன்றிருந்தமையை அறியலாம்.

பரிபாடலில் அமைந்த பண் முறைகள் அவை இசை நயம் மிக்க பாடல்கள் என்பதனை உணர்த்தவல்லன. 11 பாடல்கள் பாலை யாழினிலும் அடுத்த 5 பாடல்கள் தோத்திரத்திலும், அடுத்த நாலு பாடல்கள் பண் காந்தாரத்திலும் பாடப்பட்டன. இப் பாடல்களின் செய்யுட்களை இயற்புலவர்கள் இயற்றினர் எனவும், அவைகட்கு இசைப் புலவர்கள் பண்ணமைத்துப் பாடினார்கள் எனவும் அவர்கள் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கருத்து வளம், இசைச் சிறப்பு, பண்ணின் மேன்மை இவற்றோடு அமைந்தவை பரிபாடல். இப் பாடல்கள் பண்ணிசை அமைக்கத் தக்க இயல்அமைப்புடன் கூடியவை என்றும் பண்ணத்தி என்னும் பாடல் வகை பண்ணையே முதலாகக் கொண்டு அமைந்தது என்றும் கூறப்படுகின்றது.

பழந்தமிழர் நாட்டில் பண்ணிசை அறிவு எத்துணை பெருகி செம்மையாய் நிலவியிருந்தது என்பதை பாணர்களுடைய வாழ்க்கை முறையிலிருந்து உணரலாம். சிறுபானாற்றுப்படை, பெருமபானாற்றுப்படை, பொருநராற்றுப் படை, மலைபடுகடாம் என்ற கூத்தராற்றுப் படை ஆகிய நூல்களில் இருந்து நிரம்ப இவை பற்றிய செய்திகளைப் பெறலாம்.

பண்ணை இசைப்பவன் பாணன். இவர்கள் இசைப்பாணன், யாழ்ப் பாணர், மண்டைப்பாணர் என மூவகைப்படுவர். பாணரைச் சென்னியர், வைரியர், மதங்கர், பண்ணவர், அம்பணவர் என்றும் அழைப்பர். பெண்பாணர்கள் பாணிச்சி, பாடினி, விறலியர் (திறமை பெற்றவர்கள்) என வழங்கப்படுவர்.

சங்க இலக்கியங்களிலே, பண் வகைகள் பண்பாடப்படும் பொழுதுகள், கருவிகள், பண்களைப்பாடும் பாணர், பாடினியர், விறலியர், முதலியோர் குரல், உழை, இளி, விளரி என்பன பற்றிய குறிப்புகள் பண்ணமைத்தலாகிய செயல்கள் என்பன போன்ற பண்ணிசை பற்றிய பல தகவல்கள் பரலாகக் காணப்படுகின்றன. இவற்றைத் தொகுத்து நோக்கும் போது சங்க காலப்பகுதியில் பண்ணிசை ஒரு தனிக் கலைத் துறையாக, தமிழரிடையே உருப் பெறத் தொடங்கி விட்டமை புலனாகின்றது.

சங்க காலத்தை அடுத்து எழுந்த சங்கமருவிய காலப்பகுதியே தமிழரின் இசை வடிவம் சீர்சால் உயர்கலையாகச் சமூக அந்தஸ்தும் இலக்கண அமைதியும் பெற்று வளர்ச்சியடைந்த ஒருகால கட்டமாக விளங்குகின்றது.

சங்கீத ஸ்வரங்களாக சுட்டப் படும் ஷட்ஜம், ரிஷபம் முதலிய ஏழிற்கும் தமிழிசை, மரபில் குரல், துர்த்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற பெயர்கள் வழங்குகின்றனர். சங்கப் பாடல்களில் குரல், உழை, இளி, விளரி என்பன பற்றிய குறிப்புக்களைக் காணலாம், விளரி என்பது மண்ணின் வகைகளில் ஒன்றாகவும் குறிப்பிடப்பட்டது. சிலப்பதிகாரத்திலே இந்த ஏழும் இடம் பெறுகின்றன. அரங்கேற்றுக் கதையிலே இவை யாழ் நரம்பிலிருந்து எழும் ஒலிவடிவங்களாக எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆச்சியர் குரவையிலே இந்த ஏழையும் பாத்திரங்களாக உருவகித்து நிறுத்தி அமையும் ஆட்டத்தைக் காணலாம்.

இந்த ஏழையும் காரைக்கால் அம்மையார் இக்காலத்திலே அவரது திருப்பதிகத்தில்,

"துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை, இளி, ஓசை, பண் செழுமப்பாடி" எனும் அடிகள் மூலம் விளக்குகின்றார்.

இக்காலத்தில் எழுந்த அற நூலான திருக்குறளில் வள்ளுவர் பண்ணின் சிறப்பைத் தெளிவாக உணர்த்த வேண்டியதொன்றாகக் கருதி, உவமையாக அதனை அமைத்து உவமைமிகும் பாண்மையில் புகன்றார். இக்கருத்தை,

"பண்ணென்னாம் பாடற்சியை
பின்றேல் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண்"
(குறள் 573)

எனும் குறள் கூறுகின்றது. இக் காலத்துக் குறட்பாக்களுக்கு-பண் அமைத்துப் பல விடத்தும் இனிமை மிகப்பாடப்பட்டு வருதலைக் காண்கிறோம். இப் பண்ணிசைக் குறட்பாக்களை நோக்கும் கால் திருக்குறள் முழுத் தமிழிசை நூலாகவே பொலிகின்றது.

மேலும், இக்காலத்திலே எழுந்த காப்பிய நூல்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் பண்ணிசை பற்றிய பல செய்திகள் கூறப்படுகின்றன.

"எண்ணும் எழுத்தும் இயலைத்தும் பண்ணான்கும்
பண்ணின்றே கடத்தும் பதினொன்றும் - மிண்ணின் மேற்..."

எனவரும் அடிகள் மூலம் நான்கு விதமான பண்கள் இருந்தமை பற்றிக் கூறப்படுகிறது. பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழி யாழ் என்பவை நாற் பண்புகளாகக் கொள்ளப்படுகின்றது. அத்தோடு பண்ணிசையுடன் கூடிய பதினொரு கூற்றுக்கள் ஆடப்பட்டமை பற்றியும் கூறப்பீடுகின்றன. சிலப்பதிகார அரங்கேற்றுக் கதையில் தண்ணுமை ஆசிரியனின் இலக்கணம் கூறும் இடத்து "பண் பாணி தூக்கே முடமே" என்றும் குழலாசிரியனின் இலக்கணம் கூறுமிடத்து "பண்ணமை முழுவின் கண்ணெறி அறிந்து" எனவும் யாழாசிரியரின் இலக்கணம் கூறும் போது,

"படுமலை செவ்வழி பகரரும் பாலையெனக் குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்" என்றும்

"இளி முதலாகிய ஓர் படுகிழமையும் கோடி விளரி மேற் செம் பாலையும்" என்றும் பண்ணிசை பற்றியும் பண்களுக்குரிய கருவிகளான முழவு, யாழ், கோடு முதலியவை பற்றியும் பண்ணிசைக்குரிய ஸ்வரங்கள் பற்றியும் கூறப்படுகின்றது.

மணிமேகலையின் ஊரலுரைத்த கதையில் மாதவியின் நாடகப் புலமை கூறப்படும் போது,

"வேத்தியல், பொதுவியல் எண்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாலைப் பாடலும்" என்று குறிப் பிடப்படுகின்றது. இக்காலத்து எழுத்து இலக்கியங்களைத் துணைக்கொண்டு இக்காலத் தமிழரின் பண்ணிசை மரபு சீர்சால்

**வலன்ரீனா இளங்கோவன்**
*ஆசிரியை*
*யா/கொக்குவில் இந்துக்கல்லூரி*

உயர்கலையாக சமூக அந்தஸ்தும் இலக்கண அமைதியும் பெற்றதாக வளர்ச்சியடைந்து இருந்ததைக காணமுடிகிறது. பாணர் என்ற கலைஞர் குழுவினரிடம் பயின் இசை, நாடக மகளிர் குலத்துக்கும், வணிககுலத்துக்கு நம்பியார்க்கும் மகிழ்வூட்டற் பயின்கலையாக சமூக அந்தஸ்தைப் பெற்றுவீடுகின்றது. இசை ஒரு கல்வித்துறையாவும் பரிணாமம் பெறுகிறன்றது.

"முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையில் இருந்த யாழ்க் கருவியானது இளங்கோவடிகள் காலத்திலே இசையாசிரியன் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச் சேர்ந்து விட்டது" என்று யாழ்க் கருவியின் வரலாற்றை சுட்டும் வகையில் விபுலானந்த அடிகள் குறிப்பிடுவது (இலக்கியக் கட்டுரைகள் பக் 52-53) யாழுக்கு மட்டுமல்ல இசை மரபு முழுமைக்கும் பொருந்துவதாகும். இவ் வளர்ச்சி வரலாற்றினை நோக்கி ஆராய்வதற்குச் சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூலாகக் கொள்ளப்படும் கலித்தொகை பயன் தரத்தக்க தகவல்களைத் தரும் எனலாம்.

*(தொடரும்)*

## கைக்குண்டு வீச்சு

(வாழைச்சேனை)

ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது கடந்த 14ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கைக் குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இதனால் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ள போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்'வில்லையென வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. குண்டு வீச்சுக்கான பின்னணி ஏதுவெனவும் புலப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

(ப-121)

## கொலையுண்டவர்கள் இனம் காணப்பட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் இனங்காணப்பட்டுள்ளார்.

நயிந்தன் குணராசா (வயது 23) எனபவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுளளதாகத் தெரியவருகிறது.

குறிப்பிட்ட இளைஞர் கடந்த 4 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து மரணவீடு ஒன்றுக்கு சென்றிருந்த வேளை காணாமல் போனதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, கிரானில் கடந்த வியாழனன்று சுட்டுக்கொல்லப் பட்ட இளைஞர்கள் அதேயிடத்தைச் சேர்ந்த யோகராஜா பிரசாந் (வயது 17), செல்வரத்தினம் யதுர்சன் (வயது 18) என அடையாளங் காணப்பட்டுள்ளது.

(ற-8)

## தனவந்தரின் பெருந்தன்மை

(காரைநகர்)

காரைநகர் காரை மத்திக் கிராமத்தில் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களிற்கு தனவந்தர் ஒருவர் பண வைப்புக்களை காரைநகர் சமுர்த்தி வங்கியில் இட்டுள்ளார்.

அண்மையில் காரை மத்திக் கிராமத்தில் நெருப்புக்காய்ச்சலினால் 300இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டனர். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளானார்கள்.

இதனைக் கவனத்தில் கொண்ட தனவந்தர் ஒருவர் 23 வறிய சிறுவர்களிற்கு தலா ஆயிரம் ரூபா வைப்புத் தெகையை இட்டு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (உ-246)

## அரசுடன் இணைய ஆசைதான்; ஆனால் அது கைகூடவில்லை

### என்கிறார் தம்மாலோக தேரர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு தமது கட்சி தயாராக இருந்த போதிலும், அதனை அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்வதாக ஜாதிக் ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் தொிவிததார்.

நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வருமாறு தாம் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ள போதும், அதற்கு உரியமுறையில் பதிலளிப்பதற்கு கூட்டமைப்பு அரசாங்கம் காலம் தாழ்த்தி வருகின்றது.

அரசாங்கத்துடன் செய்யப் படவுள்ள இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் தம்முடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ள போதிலும் இது தொடர்பாக உத்தியோகபூர்வ முடிவுகள் இன்னமும் எமக்கு அறிவிக்கப்படவில்லை .

எனினும் தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எந்த விதமான நடவடிக்கைகளுக்கும் எமது கட்சி ஆதரவ்ளிக்காது.

பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியுடன் இடம் பெற்ற இரண்டு சந்திப்புக்களிலும் இந்த முடிவினைத் நாம் அறிவித்திருந்தோம்.

ஆனாலும் ஜாதிக ஹெல உறுமயவுடன் அரசாங்கம் இணைந்து செயறபடுவது தொடர்பாக அரசாங்கத்துள் அங்கம் வகிக்கும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் உடுவே தம்மாலோக தேரர் மேலும் தெரிவித்தார். (ப-121)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படவுள்ள இலக்கிய விழா தொடர்பான இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாண வலயக்கல்வி அலவலகக்கின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச அலுவலகங்களிலும் கடமை புரியும் அனைத்துக் கலாசார உத்தியோகத்தர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கேட்டுள்ளார்.

(7.5)

## சமுர்த்தி உதவி பெறுவோரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

சமுர்த்தி உதவிபெறுவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கென நீண்ட காலத் திட்டமொன்றை தாம் அமுல் படுத்தி வருவதாக சமுர்த்தி பிரதி அமைச்சர் ஜகத்புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியனார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

தற்போது பல பிரதேசங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உடனடியாக குடிநீர்வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் உலர் நிவாரணங்களை வழங்குவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த உலர் நிவாரண விநியோக நடவடிககைகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு அமைச்சு எண்ணியுள்ளது.

இதேவேளை, சமுர்த்தி உதவி பெறுவோர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் கூறப்படுவதால் அதற்குத் தீர்வு காணும் வகையிலான திட்டமொன்றைத் தாம் ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கார். (க-60)


## வைரவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி வைரவிழாவும் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிலே வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆர்.விசாகலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (க-52)

# வியாழ மாற்றம்



(நேற்றைய தொடர்ச்சி)

## ரிஷபம்



**11.02.2005 முதல் 24.03.2005 வரை**

உங்கள் குடும்பம் தன நிலையையும் உயர்த்தும் காலமாகும். காலம் கடந்து விட்டதாக எண்ணிய கடனும் வந்து சேரும். தமிழ் புதுவருடத்தில் உங்கள் பக்கிய அதிபதியும் உச்சம். எதிலும் முற்போக்கான சூழ்நிலையே இருக்கும். தொழில் வகை சூடுபிடிக்க ஆரம்பித் திருக்கிறது. உங்களுக்கு ஓய்வு இல் லாமல் வேலை கொடுப்பவன் குரு. கணவன்,மனைவி உறவிலே பூசலில்லை. சொல்லைக்காக்க சோர்வின்றி உழைப் பர்கள்.தொழில் கூட்டாளிகளின் இயக கம் திருப்தியாக இருக்கும்.புதிய ஒப்பந் தம் செய்வது கலைப் பிரிவு மனிதர்க ளின் தொடர்பைப் பெறுவது போன்ற நன்மைகளும் இருக்கத்தான் செய் யத்தைக் கொடுக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் :6, 3, 9**

**அனுகூலத்திக்குகள் : மேற்கு, தெற்கு.**

**24.03.2004 முதல் 07.05.2005 வரை**

குடும்ப உறவினர் வகையிலும் அமை தியான போக்கு நிலவிவரும். தொழில் கூட்டு மனிதர்களிடமும் இப்படியே சிலர் அன்னிய நாட்டு பிரயாணத்தை மேற் கொள்ள அவசரமுயற்சி உடையவர்களாக இருப்பர். எல்லாவகைக்கும் கௌரவப் பிரச்சினைதான் முன்னிற்கும். கணவன், மனைவி உறவு படிப்படியே நன்றாக இருக்கும். மாணவ, மாணவியர்க்கு நல்ல காலம் என்பதால் தேர்வுக்கு கவனித் துப் படிக்கவேண்டும். போட்டி,பந்தயம் அனுகூலம் ஏற்படும்.அரசாங்கக் காரி யங்களில் அனுகூலம் ஏற்படும். அரசி யல் மனிதர்கள்,அரசாங்க அதிகாரிகள் அனுகூலமிக்கவர்களாக தென்படுகிறாா கள். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் வது நல்லது. செய்தொழிலில் சில பெண் கள குறுக்கிட்டால் குதர்க்க நிலை ஏற்பட லாம் எச்சரிக்கை தேவை. முடிவு எடுப் பது உங்கள் எண்ணப்படியே இருப்பது நல்லது.மேலும் வீடு,மனை சம்பந்தப் பட்ட விடயங்களில் பிரச்சினைகள் ஏற் படலாம்.முடிவு இவர்களுக்கு வெற்றியே. தாயுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட லாம். உறவினர் வீட்டுக்குச் செல்வதை அடுத்து இனி முதல் தொடங்கலாம். கடின உழைப்புத்தான் கணிசமான தொகையும் கைக்கு வந்து சேரும் மகிழ்ச்சியே தொழில் சமபந்தமான பிரச்சினைகளல் உங்கள போக்கு மற்றவர்கள்ால் பாராட்டுப் பெறக் கூடியதுதான். சிலவழி நன்மையில்லை. இப்போது குரு வக்ர கெதியில் செல்லு கிறான்.நாகரிக வாகனம்,உயரிய குடும் பத்தேவைப் பொருள்கள் சேர்க்கையும் உண்டாகிவிடும் இப்போது சுபகாரி யங்களுக்கு தேவையான பணம் உடனே பந்தமும் உண்டாகும். ஒப்பந்த தொழில் உடையவர்களுக்கு உடனே நடை முறைப் படுத்தப்படுவதாக இருக்கும். கணவன், மனைவி உறவில் கரச்சலில்லை. புத்திர வகை மனபேதம் தவிர்ககமுடியாததாக இருக்கும். புத்திரியர்கள் வகை சுமுக சூழ்நிலையுடையது.மற்ற இனத்து மனி தர்கள் மூலம் சிலவகையான தன வரவு இருக்கும். உங்களுக்கு எதிரிடையாக இருந்தவர்களுக்கு இப்போது தீமை விளையும் காலம். தைரியமாகச் செல லுங்கள். வரும் நன்மைகள் எதுவும் வழியில் நிற்கப்போவதில்லை. முடிவு நன்றாகவிருக்கும். தீமையைச செய்ய முடியாது. சுப வசயம் குறித்து தடைப் பட்டிருந்த கடிதத் தொடர்பு மீண்டும் தொடரும்.சிலர் எப்போதோ செய்த செய லுக்கு இப்போது பதில் சொல்லவேண்டிய அவசியமும் உண்டாகிவிடும். கடன் வகைகள் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். நாகரிக வாகனம், அணிகலன்கள் வகை யில் இப்போது பணமுதலீடு செய்வதும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக் கும். பெண்கள் வகைக்கு இது முற்போக் கான காலமாக இருக்கும் .அரசியல் வழிமனிதர்கள் சிலவகையில் உங்க ளுக்கு இணக்கமாக இருப்பது தொழில் வகைக்காரிய சாதனைக்கு மிகவும் முக்கியமாக இருக்கும். கலைப் பிரிவு ஆண்,பெண்களுக்கு புதிய மனிதர்களின தொடர்பு மனததிருபதியான செயலுக்குக் காரணமாக நிற்கும். குழந்தைகள் ஆரோக்கியம் திருப்தியானது. இக் காலம் கடைப்பகுதி இப்போது கணி சமான முன்னேற்றம் இருந்தாலும் செலவுகள் கடுமையாக இருப்பதற்கு காரணம் வக்ர குருதான். பிற இனத் தவர்கள் சிலர் உங்களுக்கு உதவியாக செயல்படுவர். தொழில் வகை கொஞ்சம அலைச்சல் அதிகம்.சிலசமயம் உரிய நேரத்தில் உணவுகொள்ளவும் முடி சீரமைந்ததாகவே இருக்கும். புது உடை கள் சேர்க்கையும்,பெண்களுக்கு கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலகப் போக்கு சுமுகமாக இருக்கும்.

உடனிருப்பவர்களும் திருப்தியான போக்கில் இயக்கம் கொள்வர். குழந் தைகள் வ்கையில் சுபச் செலவும் இருக் கம்.உஷ்ணப்பிணிக்கு வேண்டி மருத் துவச் செலவும் இருக்கும். இக்காலம் போட்டி, பந்தயம், விளையாட்டு இந்த வழி நன்மைகள் இருக்கின்றன. உத்தியோ கப் பிரிவினர்கள்தாம் செய்யும், செய் யப் போகும் எல்லா அலுவலகங்களிலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது அவசியம் .காரணம் உங்களுக்கு எதிராக ஒரு கூட்டமே செயலபடுகினறன என்ப தில் சந்தேகம் இல்லை.

**அதிர்ஷ்ட எண்கள் :3, 1, 5**

**அனுகூலத்திக்குகள் : வடக்கு, மேற்கு.**

**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

உங்கள் தொழில் வழியில் இருந்து வந்த மந்தநிலை அகன்றுவிடும். அயல் நாட்டுக் கடிதத் தொடர்பும் உங்கள் தொழில்வழிக்கு ஒருசிறப்பான நல்ல பாலமாக அமைந்துவிடும். போட்டு வைத்திருந்த திட்டங்கள் இப்போதுதான் படிப்படியே நிறைவேறிவருகின்றது என்ற மகிழ்ச்சி இருக்கும்.சிலருக்குச் சொத்து வகையில் தொடரும் வழக்கு சமாதானத் தில் போய்முடியும். இதற்கு உறவினரல் லாமல் மூன்றாவது மனிதர் பயன்படுவர். இப்போது பெண்கள் சுகத்தைக் கவ னிக்கவேண்டும். மருத்துவச் செலவு அவசி யமாகும். சிலருக்கு சூதக நோய் தேர்ன்ற வாய்ப்பு இருக்கின்றது. இது பெரிய செல வையும் உண்டாக்கலாம். சத்ரு, கடன் வகைகள் நேர்முகப் பாதிப்பு ஏதுமில்லை. சகோதரர், சகோதரி வகையில் முன்னேற் றம், திருப்தியாக இருக்கும். உத்தி

# உங்களுக்கு எப்படி?

யும் .சிலர் இயந்திரம், வாகனம் வாங்குவது போன்ற நன்மைகளைப பெறுவர். அலைச்சல், பிரயாணமும் கூடுதலாக இருக்கலாம்.ஆனால் வரவு செய்வதில் குறைவு இல்லை. இப்போது கௌரவச் செலவுகள் அதிகமாக இருக கும். நண்பர்,உறவினர் போக்குவரவு குடும்பத்தில் அபாரமான செலவுகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். குடும்பத்தில் சுபச் செலவுகள் தள்ளிப் போய்விடும். படிப்படியே உங்கள் வாட்டம் குறைந்துவிடும் எனலாம். இந்த ராசி மாணவ, மாணவிகளுக்கு கல்வி எழுச்சி மிக்க காலம் எனலாம். கூட்டுத்தொழில் உடையவர்களுக்கு பெருத்த ஆதாயத்தைக் கொடுக்கும். புத்திரியர்கள், புத்திரர்கள் கல்வி ஆரோக்கிய வகையில் செலவு செய்ய வேண்டியும் இருக்கும். அரசாங்க மனிதர் களில் சில சலுகைகள் உங்களுக்கு ஆதரவாக இருக்கின்றன. சிலர் நாக ரிக வாகனம் வாங்குவது உண்டாகும். புதிய நண்பர்கள் சேரும்காலம் இது. பெண்களுக்கு மஞ்சல்,நலக்கல் ஆபர ணங்களும் தானே வந்தடையும். உயா அதிகாரிகள் மூலம் சில அச்சுறுத்தல் இருக்கும். தன்மீது தவறுவராமல் காத் துக்கொள்ள முன்னெச்சரிக்கையுடன் இருககவேண்டும். கலை சம்பந்தப்பட்ட வர்களின் தொடர்பு அவர்களுடன்பேச்சு வார்த்தைகளையும் உண்டாக்குவான். நீங்கள் ஆரம்பத்தில் சில அவசரப் பிரச சினைகள் இருந்தும் முடிக்கமுடியாது காரணம் சந்திரன். அதேநேரம் குடும் பத்தில் கருத்து வேறுபாடு,கசப்பான வார்த்தைகளையும் கேட்க வேண்டி யிருக்கும்.தொழில்வகைக் கடிதமும் நீங்கள் எதிர்பார்த்தது திருப்தியில் லாமல் வந்துசேரும்.பழைய கடன் சில தும் சலனப்போக்கை உருவாக்கும். பின் நீங்கள் பலம் பெறுவீர்கள். தாமதப் பட்ட காரியங்கள் தானே கூடிவந்து விடும்.அரசியல் வட்டாரத்தினர்கள் இப்போது கௌரவ செலவு உடைய வராக இருப்பர். பிரயாணம் முக்கிய இடம்பெறும். போட்டி, பந்தயம், விளை யாட்டுப் போன்ற வழிகள் சிறு ஆதா வந்து சேரும். உடனிருந்தவர்களுக்கு உபகாரம் செய்வதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கலைப் பிரிவினர்களுக்கு காலக்கெடு வைத்திருந்தவர்கள் இப் போது செயலுக்கு வந்துவிடுவர். உங் கள் தொழில் முயற்சியை மற்றவர் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். பழய வாகனம் புதுப்பித்தல்,புதிய வாகனம் வாங்குவது போன்றவையும் உண்டாகும். நீங்கள் முன்பு குறையாகவிட்ட வேலை களை இப்போது முடிக்க வேண்டியிருக் கும். பிறர் இனத்தவர்கள் சிலர் பழைய நண்பர்கள் சிலரை நீங்கள் இப்போது சந்திக்கவேண்டிய அவசியமும் அவசர மும் உண்டாகிவிடும். சிலர் பெண்கள் மூலம உபகாரம்பெறுவதையும் செய்யும். பெரிய மனிதர்கள் தொழிலதிபர்களு டன் சேர்ந்து விருந்துண்ணலும் இருக் கும.அரசியல் மனிதர்களுக்கு இப்போது புதிய வேலைகள் வந்துசேரும். இது பொறுப்புக்களை அதிகமாக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் :9, 3, 6**

**அனுகூலத் திக்குகள் : கிழக்கு.**

**07.05.2005 முதல் 20.06.2005 வரை**

சோர்வின்றி உழைப்பீர்கள். நேர்மை யில்லாத மனிதர்களும் இப்போது நெருக் கமாக உறவுகொள்வர்.பழைய நண்பர்கள சிலர் இப்போது மீண்டும் வந்து சேர்வர். புதுக் கட்டடம் குடிபுகுதல் போன்ற நல்ல பலன்களும் இப்போது இருக்கின்றது. கடன் சில சமயம் அச்சுறுத்துவது போல் இருந்தாலும் உங்கள் நிலையில் எந்த வித பாதிப்பையும் செய்யாது. தொழில் வகையில் நீங்கள் இப்போதுதான் முற் போக்கான சூழ்நிலையைப்பெற ஆரம் பித்திருக்கிறீர்கள். முன்பு ஏற்பட்ட பிணக்கு நீங்கியவர்கள் இப் பிரிவு கண வன்,மனைவி சத்துருக்களையும் சுமுகப் போக்கில் இயங்க வைப்பவன் இந்தக் குரு. பூமி,வாகனம் அல்லது இதரக் கலைததுறையின் மூலமாக தன கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு பங்காளிக ளிடமிருந்து மனபேதம் குறைந்துகொண்டு வருவதை நீங்கள் உணரக்கூடும். இப் போது தொழில் வழியில் சில ஒப் யாது.

**அதிர்ஷ்ட எண்கள் :3, 2, 7**

**அனுகூலத்திக்குகள் : தென்மேற்கு**

**20.06.2005 முதல் 03.08.2005 வரை**

இக்காலம் செவ்வாய் கார எல்லை 7-12கதும் உரியது.செவ்வாய் உங்களுக்கு முழுசுபக் கிரகமல்ல.இது உங்கள் பஞ்சம இல்லத்துக் குரு தொழில் முற் போக்கான ஒரு சூழ்நிலையைத்தோற்று விப்பவன்.உங்களை விட்டுவிலகியி ருந்த நண்பர்கள் மீண்டும் வந்து சேருவர். வழக்கு,கடன் வகைகள் இப்போது உங் களை விட்டே விலகிநிற்கும். உடல்சுகம அனுபவிப்புக்கு குறைச்சல் இல்லை. குடும்ப உறவினர், நண்பர்கள் இல்லமதில் நடக்கும் விருந்து உபசாரங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் அவசியம உண் டாகும். இப்போது வேண்டாத மனிதர்க ளையும் சந்திக்க வேண்டியிருக்கும். குறைந்த வேகத்திலிருக்கும் நோயும நரம்பு நோயும் மற்றும் சிலருக்கு அளிக்க வேண்டியிருக்கும். உஷணபிணி, உடல ரிபபு போன்றவையும் உண்டாகும். குடும பவகைக்கு பச்சைக்கல் ஆபரண சேர்க்கை, புது உடைகள் சேர்க்கையும் உண்டாகும்.அரசாங்க அலுவலர்களுக்கு இடமாற்றம்;இலாகா மாற்றம் போன்றவை உண்டாகும்.எழுத்து மூலம் வருவாயை எதிர்நோக்கும் கலைஞர்களுக்கு திருப் தியான போக்கு இல்லை என்றாலும் தனிவருவாய் நன்றாகவே இருக்கும். குடும்பவகைக்கு அசையாப் பொருளை சேர்ப்பீர்.அடிக்கடி ஏற்படும் பிரயாணம் அலுப்பை உண்டாக்கினாலும் தன ஆதா யம் தள்ளிவிடமுடியாமல் இருக்கும். புகழையும் கௌரவத்தையும் சேர்க்க வேண்டிய காலமிது. புத்திரிஅல்லது புத திரன் வைக்கு சுபசெலவுகள் அபார நன்மைகளைச் செய்யும்.அரசியல் மனி தர்கள் மூலம் கணக்கு வழக்குகளிலிருந்த சிக்கலைப் போக்கிவிடுங்கள். நாகரிகப் பொருள் சேர்க்கை, குடியிருப்பு இட மாற் றம் பொன்ற நன்மைகளும இருக் கின்றன. நீங்கள் வெகுதூரம் பிரயாணத் தையும் மேற்கொள்ள வேண்டியது இருக்கலாம். கணவன்,மனைவி உறவு யோகவகையில் மேல்மட்ட மனிதர் களின் தெல்லைகள் இப்போது குறைந்து விட்டது எனலாம். உங்கள கௌரவம் காககப்படும். இலாகா மாற்றம் அவசியம இல்லாமல் போய்விடும். முன்பு அதை விரும்பியவர்கள் இப்போது அப்படிப் பட்ட மாற்றத்தை வரும்பமாட்டீர்கள். நண்பர்கள, உறவினர்களுடன சேர்ந்து விருந்துண்பதும் இருக்கும். இப்போது உங்கள் பழய வாகனத்தில் செலவுகள் உண்டாகும். அல்லது மாற்றுவது புதிய தாக வாங்குவது போன்றவையும் உண் டாகும். முடியாமல் இருந்த வேலைகள் சில திடீரென்று கூடிவந்து விடும். கடிதத் தோடு நின்றிருந்த விசயங்கள் சில நடை முறைக்கு வந்துவிடும். குடும்பத்தில் சுப விரயங்கள் இடம் பெறும். கூட்டுத் தொழில மூலம் தனவரவு நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமானதாக இருக்கும். பச்சை நிறக்கல் ஆபரண சேர்க்கையை உண் டாக்கும். கணவன், மனைவியிடையே இப் போது தான கனிவான போக்கு அதிக ரித திருக்கிறது. தேகாரோக்கியம் தெளிவாக இருக்கும்.குடும்ப உறவினர் போக்கு, வரவு குடும்பத்தில் கௌரவச் செலவுகள்ள அதிகமாக்கும். சில குடும் பத்துடன், புகழ் பெற்ற புண்ணிய ஸ்தலப பிரயாணத்தை மேற்கொள்வர். மாணவ, மாணவியர்களுக்கு கல்வியில் சிறப்பு உண்டு. உத்தியோகப் பிரிவு ஆண், பெண் களுக்கு இப் போது அலுவலகப் போக்கு சுமுகமான தாக இருக்கும். சில வகையில் மேன்னிலை மனிதர்கள் முதல் கீழ்நிலை மனிதர்க ளும் உங்களுக்கு இணக்கமான முறை யில் செய் படுவதால் உங்கள் கௌரவம் உயர்ந்து நிற்கும். தன்னமபிக் கையில் உங்கள் செயல் வேகமுடையதாக இருக்கம்.

**அதிர்ஷ்ட எண்கள் :4, 3, 7**

**அனுகூலத்திக்குகள் : கிழக்கு, தென் கிழக்கு.**

(தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# நல்ல தீர்ப்பு

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார் அவர் மிகவும் நல்லவர். ஒருநாள் அரண்மனையில் விசாரணை நடந்து கொண்டிருந்தது. அதில் ஒரு வழக்கு. ஒரு விவசாயி வந்து புகார் கொடுத்தார். என்ன புகார் என்றால் அவரது வயலல் ஆடுகள் வந்து மேய்ந்து பயிரை அழித்துவிட்டது. " நிறைய உழைத்து செலவு செய்து பயிரை உண்டாக்கி வைத்திருந்தேன் எல்லாம் வீணாகிவிட்டது. இனி நான் என்ன செய்வது?" என்றார் அந்த விவசாயி. "அந்த ஆடுகளுக்கு சொந்தக்காரர் யார் எனக் கண்டுபிடித்து அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்" என உத்தரவிட்டார் ராஜா.

சேவகர்கள் சென்று அவரை அழைத்து வந்தார்கள். ராஜா விசாரித்து முடித்து விட்டுத் தீர்ப்பு வழங்கினார். " விவசாயி அடைந்துள்ள இழப்பிற்கு ஈடாக உனது ஆடுகளை அவரிடம் கொடுத்து விட வேண்டியது தான்" என்று கூறிவிட்டார். அந்த மன்னருடைய மகன் இதைப்பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்திருந்தான். அவன் இந்தத் தீர்ப்பை இன்னும சிறப்பாக வழங்கலாமே என்று நினைத்து தந்தையிடமும் கூறினான். உடனே அரசர் "சரி நீயே இதற்குச் சரியான தீர்ப்பைக் கூறு" என்றார் மன்னர்.

அந்த இளவரசன் தீர்ப்புக் கூறினான் "உமது ஆடுகள் எல்லாவற்றையும் ஒரு வருட காலத்திற்கு அந்த விவசாயியிடம் ஒப்படைத்துவிடு. அந்த ஒரு வருடத்திற்குள் அந்த ஆடுகள் ஈனும் குட்டிகள், பால், எரு எல்லாவற்றையும் விவசாயி எடுத்துக் கொள்ளட்டும் ஒரு வருடத்திற்குப் பின்பு உமது ஆடுகளை நீ திரும்ப வாங்கலாம்" இதுதான் இளவரசன் சொன்ன தீர்ப்பு. இது சரியான தீர்ப்புத்தரன். "இனி எனது அரச பொறுப்புக்களை இளவரசனிடம ஒப்படைக்கிறேன்" என்று ஒப்படைத்து விட்டாராம்.

ஒரு தண்டனையைப் பெறுபவன அதன் பின்பு சமூகத்தில் நல்லவிதமாக வாழ வாய்ப்பு இருப்பது போல் அமைய வேண்டும் தீர்ப்புக்கள். அதற்கு இது ஓர் உதாரணம் சில தீர்ப்புக்கள எப்படி அமையுமென்றால ஒரு தண்டனையை அனுபவித்து முடித்தவன் அதன்பின்பு அவன இந்தச் சமூகத்தில் நல்லபடியாக வாழ நினைத்தாலும் அதற்கு தகுதியில்லாதவன் என்ற அளவுக்கு சூழ்நிலை அமைந்து விடுகிறது. இது சிந்திக்க வேண்டிய ஒரு செய்தி.

இன்னொரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் ஒரு போட்டி வைத்தார். என்ன போட்டி என்றால் அரண்மனை வாசலில் ஒரு பெரிய நீச்சல் குளம் அதில் நிறைய விஷப் பாம்புகள். " எந்த இளைஞன் துணிச்சலாக அந்த நீச்சல் குளத்தில் குதித்து நீந்தி கரையேறி வருகிறானோ அவனுக்கு 100ஏக்கர் நிலம் பரிசாக வழங்கப்படும். அது வேண்டாமென்றால் 1000ஆடுகள் பரிசாக வழங்கப்படும். அதுவும் வேண்டாமென்றால் எனது மகளைத் திருமணம் செய்து கொள்ளலாம்" இதுதான் மன்னனது அறிவிப்பு.

பரிசெலலாம் நல்லதாகத்தான் இருக்கிறது. பாம்புகள் உள்ள குளம் என்பது சரி இல்லையே அதனால் யாரும் அதில் குதித்து நீந்த முன் வரவில்லை. இருந்தாலும் திடீரென்று ஒரு இளைஞன் அந்த நீச்சல் குளத்தில் குதித்து நீந்தினான். ஒரு வழியாகக் கரையேறி வந்து விட்டான்.

மன்னருக்கு மிகவும் மகிழ்ச்சி. "நீதான் தைரியமான இளைஞன் வா இப்படி" என்று அழைத்தார். அந்த இளைஞன் தண்ணீர் சொட்டச் சொட்ட வந்தான். " உனக்கு 100 ஏக்கர் நிலம் வேண்டுமா?" என்றார். "வேண்டாம்" என்றான் அவன். "சரி 1000 ஆடுகள் வேண்டுமா?" என்றார் மன்னர். "அதுவும் வேண்டாம்" என்றான். "ஓ... அப்படியென்றால் என் பெண் வேண்டுமா?" என்று கேட்டார் "அதுவும் வேண்டாம்" என்றான்.

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "அப்படியானால் உனக்கு என்ன தான் வேண்டும்" என்றார். "என்னைப் பிடித்து இந்தக் குளத்தில் தள்ளி விட்டவன் யார் என்று எனக்குத் தெரியவேண்டும்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யுத்த காலத்தில் நிலவிய சூழ்நிலையே மட்டக்களப்பில் தற்போதும் உள்ளது

## ஜெயானந்தமூர்த்தி எம்.பி. சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

மட்டககளப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக பொலிஸ் மற்றும் படைத்தரப்பினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்திருப்பது குறித்து மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி மற்றும் அரியநேந்திரன் ஆகியோர் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சமாதான விவகார அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதற்கு அங்கு இடம்பெறும் வன்முறைகள் தான் காரணம் என படைத்தரப்பினர் விளக்கம் கூறுகின்றனர்.

இது குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சமாதான விவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் குறித்து எஸ். ஜெயானந்தமூர்த்தி எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

அணமைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் படுகொலைச் சம்பவங்கள் பெரும்பாலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

புரிநதுணர்வு ஒப்பந்தம் அமுலில் இருக்கும் இவ்வேளையில், இவ் ஒப்பந்தத்தின் படி பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கின்றது.

இநநிலையில் இவ்வாறு சோதனை நடவடிக்கைகளை பொலிஸாரே நடாத்த வேண்டும். ஆனால் இங்கு அதிகமான சந்தர்ப்பங்களில் இராணுத்தினரும் விசேட அதிரடிப்படையினருமே சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சமும், பீதியும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலைமைகள் குறித்து நேரில் சென்று நாம் அவதானித்தோம். வாகனங்களில் செல்லும் பயணிகள் இடை நடுவல் இறக்கப்படுவதுடன், பெண்களை ஆண் படைத்தரப்பினர் சோதனையிடுகின்றனர். இது குறித்து பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

போர் ஏற்பட்டிருந்த காலத்தில் எவ்வாறான சூழ்நிலை இருந்ததோ அந்த சூழ்நிலையே இப்போதும் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டார். (ந-121)

# ஹெல உறுமயவுக்கு ஜே.வி.பியின் விளக்கம் மிகவும் பயனுடையது

## ம.ம.மு.தலைவர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக உரிய விளக்கம் அளிப்பதற்காக ஜே.வி.பியினரை சந்தித்துப் பேசுவதில் தாம் அக்கறை கொண்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள நிலையிலேயே தாம் விடுதலைப் புலிகளை ஜே.வி.பி.யினருடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.



வெளிநாட்டவரை அழைத்து தமிழ் மக்களின் அபிலாஷைகள் குறித்து விரிவான விளக்கமளிக்கப்படவுள்ளது. இதேபோன்று உள்நாட்டில் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போனற அமைப்புக்களுக்கும் அவ்வாறான தெளிவுகளை வழங்குவது மிகவும் பயனுடையதாகவிருக்கும் என்று விடுதலைப்புலிகள் எண்ணம் கொண்டுள்ளனர்.

புலிகள் ஜே.வி.பியினரைச் சந்தித்துப் பேசுவது தொடர்பில் ஜே.வி.பியினருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது . இருந்தபோதிலும் அவர்களின் தலைமை இது விடயம் குறித்து தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## இராசி பலன்

17.08.2004

*(ஆவணி 01 ,செவ்வாய்க்கிழமை)*

பிரதமை மு.ப. 8.24 மணிவரை

மகம் மு.ப.10.24 மணிவரை

இராகுகாலம் 3.05 - 4.35 மணிவரை

சுபநேரம் 10.35 - 12.05 மணிவரை

**மேடம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு, கௌரவக் குறைவு, மனச்சோர்வு.

**இடபம்**
கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக்குறைவு, விரும்பாத உறவு, தனவிரயம்.

**மிதுனம்**
கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, இனிய அனுபவம், பணவசதி,

**கடகம்**
மதிப்புக்குறைவு, பொருள் விரயம், மாதர்நட்பு, எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**சிங்கம்**
நல்ல பிரயாசை, நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, கற்பனை மிகுதி.

**கன்னி**
பிதா சிந்தை, மனக்குழப்பம், பணவிரயம், காரிய அலைச்சல்.

**துலாம்**
தொழில்சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, எடுத்தகாரியம் கைகூடும், பொருள்சேர்க்கை.

**விருச்சிகம்**
சுபநிகழ்ச்சி, நல்லசெய்தி, செய்தொழில் முன்னேற்றம், பிறருக்கு உதவுதல்.

**தனுசு**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், உடல் உழைப்பு, அச்சமானநிலை, வயிற்றுக்கோளாறு.

**மகரம்**
வீண்தொல்லை, வேலைப்பளு, காரியத் தடங்கல், உடல்நலக்குறைவு.

**கும்பம்**
திடீர்பயணம், பணவருவாய், வாகனவசதி, செல்வாக்கு.

**மீனம்**
சுகவாழ்வு, தொழில்விருத்தி, காரியசித்தி, விருந்து உபசாரம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கு 80 சதவீத நிதி ஒதுக்கப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

உலக சுகாதார நிறுவனம் வருடாந்தம் வழங்கும் நிதியில் 80 வீதமான நிதி நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதாரக் கல்விப் பணியகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் நாட்டில் உள்ள பாடசாலைகளில் சுகாதாரக் கல்வியில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

இந்த சுகாதாரக் கல்வித் திட்டத்தை மாகாண சுகாதாரப் பிரிவு பொறுபேற்று நடத்தவுள்ளது. டெங்கு, எஜ்.வி எயிட்ஸ், விசர் நாயககடி, நரிழிவு போன்ற நோய்களைத் தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.இந்த முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் சுகாதாரக் கல்வி அதிகாரிகளின பற்றாக்குறையும் நீக்கப்படும் என் றும் தெரிவித்தார். (ந-க,8)

# எரிபொருள் விலை அதிகரிக்க காரணம் என்னவென விளக்கம்

(கொழும்பு)

உலக எரிபொருள் சந்தையில் ஏற்பட்ட விலையதிகரிப்பே இலங்கையில் எரிபொருள் விலைகளில் மாற்றம் ஏற்படக் காரணமென இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலக எரிபொருள் சந்தையில் ஏற்பட்ட விலை மாற்றத்திற்கு அமைய ஒரு லீற்றர் டீசலின் விலை 12ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் தாம் பொதுப் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 4ரூபாவால் மட்டுமே டீசலின் விலையை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-க,61)

# வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெலலிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் சப்பற, தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 26,27,28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-8)

# சமிந்தவாஸின் அபார பந்துவீச்சில் ஆட்டம் கண்டது தென் ஆபிரிக்க அணி

## தெ.ஆ.வுக்கு எதிரான முதல் தொடர் வெற்றி

(கொழும்பு)

சமிந்த வாஸின் அபார பந்து வீச்சினால், இலங்கையணி தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றுள்ளது.



கொழுமபு எஸ்.எஸ்.சி.மைதானத்தில் இலங்கை-தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 470 ஓட்டங்களையும் தென்ஆபிரிக்க அணி 180 ஓட்டங்களையும் பெற்றன.

இரணடாவது இன்னிங்ஸில் இலங்கை அணி 4 விக்கெற்றுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை மழை பொழியத் தொடங்கியதால், நான்காம் நாள் ஆட்டம் அதிகளவில் தடைப்படடது. 492 ஓட்டங்கள் முன்னணியில் இருந்ததால் இலங்கை அணி தனது 2வது இன்னிங்சை நிறைவுசெய்தது.

தொடர்ந்து, வெற்றிபெற 493 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கை அடையும் நோக்குடன் தனது 2ஆவது இன்னிங்சை ஆடத் தொடங்கிய தென் ஆபிரிகக அணி நான்காம் நாள் ஆட்ட முடிவில் 2விக்கெற்றுக்களை இழந்து 21ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

ஐந்தாம் நாள் முதல் ஓவரிலேயே தென்ஆபிரிக்க அணியின் வீழ்ச்சி ஆரம்பமானது. விக்கெற்றுக்கள் அடுத்தடுத்து வீழத் தொடங்கின. 5 விக்கெற் இழப்புக்கு 36 ஓட்டம் என்ற இக்கட்டான நிலையில் இருந்த தென்ஆபிரிக்க அணிக்கு, 6வது விக்கெற்றுக்கு டிப்பளர்-பவுச்சர் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. ஆறாவது விக்கெற்றுக்கு 101 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தவேளை 51 ஓட்டங்களைப்பெற்ற பவுச்சர், சமிந்தவாஸின் பந்து வீச்சில் களுவிதாரணவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து விக்கெற்றுகளும் சரிய தென ஆபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 179 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. டிப்பனர் மாத்திரம் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனால் இலங்கை அணி 313ஓட்டங்கள் வித்தியாசத்தில இப் போட்டியில் மாபெரும் வெற்றி பெற்றதோடு தென்ஆபிரிக்காவுக்கு எதிராக முதன் முறையாக டெஸ்ட் தொடரையும் கைப்பற்றிய பெருமையைப் பெற்றது.

இப் போட்டியில் சமிந்தவாஸ் 6 விக்கெற்றுக்களையும், மாலிங்கா 3 விக்கெற்றுக்களையும், டிலசான் 1 விக்கெற்றையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 232 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 64 ஓட்டங்களையும் பெற்ற குமார் சங்ககார ஆட்ட நாயகனாகவும் சமிந்தவாஸ் போட்டித் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை இலங்கை தென்ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக்கொண்ட ஒருநாள் போட்டித்தொடரில் முதலாவது போட்டி, எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருக்கிறது. (07)



கிரீஸ் தலைநகர் எதென் ஸில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் முதல் தங்கப்பதக்கத்தை சீன வீராங்கனை டுலீ பெற்றார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 10 மீ. ஏர் ரைபிள் துப்பாக்கிச் சுடுதலில் அவருக்கு இப்பெருமை கிடைத்தது. தங்கம் வென்ற மகிழ்ச்சியில் டு லீ.

## வெற்றியுடன் போட்டிகளை தொடங்கும் டென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ்

(எதென்ஸ்)

ஒலிம்பிக் பெண்கள் டென்னிஸ் போட்டியில் தற்போதைய சம்பியன் வீனஸ் வில்லியம்ஸ், வெற்றியுடன் இந்த ஒலிம்பிக் போட்டியை தொடக்குகிறார். எதென்ஸ் பிரதான அரங்கில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் தற்போதைய சம்பியன் வீராங்கனையான, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ஹங்கேரியின் மெலின்டா ஜின்க் ஆகியோர் மோதினர். இந்தப் போட்டியை 6-1,6-2என்ற நேர் செட்களில் வீனஸ் வெறும் 57 நிமிடங்களில் வென்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார். தரவரிசையில் முதலிடம் வகிக்கும், பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனினை காலிறுதியில் வீனஸ் சந்திப்பார். (ப-07)



## ஒலிம்பிக்-டேபிள் டென்னிஸ்

# இந்திய வீரர் சரத் கமல் 2வது சுற்றுக்கு முன்னேற்றம்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான டேபிள் டென்னிஸ் பிரிவில், இந்திய வீரரும், காமன்வெல்த் சம்பியனுமான அசாந்தா சரத் கமல் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இவர் முதல் சுற்றில் அல்ஜீரிய வீரர். மொகமது பவுட்ஜெட் ஜாவுடன் மோதினார். இதில் தேசிய சம்பியனான சரத் கமல் எளிதான வெற்றியைப் பெற்றார்.

இப் போட்டியில் கமல் 49வது நிலை வீரராகக் கணிக்கப்பட்டிருக்கிறார். இரண்டாவது சுற்றில் கமல் ஹொங்கொங்கைச் சேர்ந்த 25வது நிலை வீரரான சஜலய் கோவுடன் மோதுகிறார்.

முன்னதாக போட்டி தொடங்கியதுமே கமலின் கை ஓங்கத் தொடங்கியது. அவர் ஒன்று, இரண்டு, மூன்று மற்றும் 5வது செட்களை வென்றார். அல்ஜீரிய வீரர் 2வது செட்டில் கடுமையாகப் போராடினார். ஆனால் வெற்றிபெற முடியவில்லை.

கமல் முதல் மூன்று செட்களை வென்று 3-0 என்று முன்னிலையில் இருந்தார். பின்பு 4வது செட்டில் அல்ஜீரிய வீரர் மொகமது கடும் போராட்டத்திற்கு பின் 13-11என்ற கணக்கில் வென்றார். பின்பு கமல் 11-7 என்ற கணக்கில் 5வது செட்டை வென்று ஆட்டத்தில் வெற்றியும் பெற்றார்.

பெண்கள் பிரிவு போட்டியில் மௌமா தாகம், தாய்லாந்து வீராங்கனை நந்தானு காம்வாங்கும் மோதவுள்ளனர். (ப-07)

## ஒலிம்பிக் - 2004

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சீனா | 5 | 2 | 1 |
| அவுஸ்திரேலியா | 5 | 1 | 3 |
| ஜப்பான் | 4 | 1 | 0 |
| இத்தாலி | 2 | 1 | 0 |
| துருக்கி | 2 | 0 | 1 |
| உக்ரெய்ன் | 2 | 0 | 1 |
| அமெரிக்கா | 1 | 4 | 3 |

## விளையாட்டு செய்திகள்




ஒலிம்பிக்தொடக்க நிகழ்ச்சியில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் காண்பவரை அதிசயிக்க வைத்தன. நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் சிலைகளா? உயிருள்ள மனிதர்களா? என்பதை அறியவே கடினமாக இருந்தது. அவ்வளவு சிறப்பாக அமைந்த நிகழ்ச்சியின் ஒரு புகைப்படம்.

## ஒலிம்பிக்கில் இன்று...

கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸில் நடைபெற்றுவரும் 2004 ஒலிம்பிக் போட்டியின் ஐந்தாவது நாளான இன்று,

அம்பெறிதல், பேஸ்போல், பட்மின்டன், கூடைப்பந்து, கரபந்தாட்டம் (கடற்கரை), குத்துச்சண்டை, படகோட்டப் போட்டிகள், குதிரையேற்றம், உதைபந்தாட்டம், வாட்போர், ஜிம்னாஸ்டிக்-நடனம், கைப்பந்து, ஹொக்கி, ஜூடோ, படகோட்டபபோட்டிகள், குறிபார்த்துச் சுடல, மென்பந்து, நீச்சல், டென்னிஸ், டேபிள்டென்னிஸ், கரபந்தாட்டம், வோட்டர்போலோ ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. (யே)




தென்னாபிரிக்காவுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:0 என்ற அடிப்படையில் இலங்கை அணி வென்றது. அதற்கான வெற்றிக் கேடயத்துடன் இலங்கையணித் தலைவர் மாவன் அத்தப்பத்து.

## யாழ். அரச செயலகத்தினால்

# யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு 40 பரப்புக்காணி வழங்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் அபிவிருத்தி மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனால் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கென சொந்தமான காணி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து அதற்கென சொந்தமான காணியோ நிரந்தரமான கட்டடங்களோ இல்லாது இருந்ததால் இங்கு பயின்று வரும் மாணவர் களின் கல்வி மேம்பாட்டில் பெரும் பாதிப்புக்களும் பின்னடைவுகளும் ஏற்பட்டிருந்தன.

எனவே இவற்றுக்கு தீர்வுகாணும் வதமாக யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கென சொந்தமான காணியும், நிரந்தரமான கட்டடங்களும் அமைத்துத் தரப்படல் வேண்டும் எனக்கோரி உயர் தொழில்நுட்ப மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் ஏற்கனவே விடுத்திருந்தனர்.

மாணவர்களுக்குள்ள இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் விதமாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, சர்வதேச தமிழீழ மாணவர்கள் பேரவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது முயுற்சிகளின் பயனாக குருநகர்ப்பகுதியில் முன்னர் பண்டகசாலை இயங்கி வந்த 40 பரப்பு விஸ்தீரணமுடைய காணியை யாழ். அரச அதிபர் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கென வழங்கியுள்ளார்.

இக்காணியினுள் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கான புதிய கட்டடம் ஒன்றை நிறுவுவதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதற்கான உதவிகளை வழங்க முன்வருமாறு யாழ். உயர் தொழில நுட்ப நிறுவனப் பணிப்பாளர் சர்வதேச மற்றும் உளளூர் தொண்டர் நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுதத்துள்ளார்.

இதேவேளை, உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கான காணியைப் பெற்றுத்தர உதவிய அனைவருககும் யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன பணிப்பாளர் ரி.ராஜரட்ணமும, தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தினரும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். (ப-43)

## தடுப்பு மருந்து வழங்கல

(சுதுமலை)

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு 16 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட சகல ஆண், பெண் இருபாலாருக்கும் இலங்கை பூராவும் சின்னமுத்து ருபெல்லா தடை மருந்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமையும், 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்த தடை மருந்தை இத் தினங்களில் ஏற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துவருவதாக தாய்சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய் வேந்திரன் தெரிவித்தார். (ப-252)

# மேற்துலக நாடுகளின் அணுக் கழிவுகள் இலங்கையில் இடம்பிடிக்க முயலுகின்றன

(கொழும்பு)

மேற்குலக நாடுகள் சில தமது அணு உற்பத்திக் கழிவுகளை இலங்கையில் போடுவதற்கு முயற்சி செய்து வருவதாக இலங்கையின் மத்திய சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் திலக் ரணவிராஜ எச்சரித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

சில நாடுகள் தமது அணுத் தொழில நுட்பக் கழிவுகளை அகற்றுவதற்கு இலங்கையை தளமாக பயன்படுத்த திட்டமிட்டுள்ளன.

அத்துடன் இந்நாடுகள் பயன்பாட்டுக்காலம் முடிவடைந்த இயந்திரங்களை இலங்கைக்கு எடுத்துவருவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

குறிப்பாக மேற்குலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டுவரும் கணனிகள், குளிரூட்டி இயந்திரங்கள் என்பவற்றை இலங்கையில் இறக்குமதிசெய்து விற்பனை செய்து வருகின்றன.

இதனால் எமது நாட்டின் சூழலிற்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

எனவே இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நோராட் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற நீர் முகாமைத்துவமும் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.அரச செயலகத்தில் அரச அதிபர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் புனர்வாழ்வு, புனர் அமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் குமாரதாஸன், அமைச்சின ஆலோசகர் சண்முகலிங்கம் மற்றும் பிரதிப் பணிப்பாளர்களும கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் அமைந்திருக்கும் 14 குளங்களையும் அதனுடன் அமைந்த வாய்க்கால்களையும் புனர்நிர்மாணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் கிராமப் புறங்களில் மழை நீர்த்தாங்கிகளையும் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-5)


## அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

*இத்தால் சகலருமறிக;*

**கஸ்தூரியார் வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும், தபாற்கந்தோர் இணைப்பு வீதிக்கும் இடையில் வண்ணாங்குளத்திற்கு அருகில், தமக்கு காணி உரித்துடமை இருப்பவர்கள் 31.08.2004-ம் திகதிக்கு முன்னர் மாநகரசபை சட்ட ஆலோசகர் திரு. அருளம்பலம் இராஜரட்ணம் எல்.எல்.பி., சட்டத்தரணி அவர்களை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 3.00 மணிதொடக்கம் 4.30 மணிவரை யாழ்.மாநகரசபைப் பணிமனையில் சந்தித்து, தங்களது ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/409)

**க.பொ.த. (சா.த)**
**மாணவர்களே! வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.**

## விவாத அரங்கு -5

விடயம்
**வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது, பாதுகாக்கின்றது.**

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பிவையுங்கள்**

*அனுப்பவேண்டிய முகவரி*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


# சர்வதேச சிறுவர் தினம் கொண்டாட ஏற்பாடு

(சுதும்லை)

எதிர்வரும் அக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தை இலங்கை பூராகவும் பயனுள்ள முறையில்கொண்டாட ஏற்பாடு செய்ய சிறுவர் நன்னடத்தை திணைக்களமும், சமூக சேவைகள் திணைக்களமும் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களப் பணிப்பாளர் என்.ஆர். ரஞ்சினி சகல பிரதேச செயலகங்கள், நகர சபைகள் மற்றும் மாநகர பிரதேச சபைகளின் தலைவர்களிற்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் இவ்வருட சர்வதேச சிறுவர் தினத்தின் " பிள்ளைகளிற்கான சிநேகபூர்வ சமூகத்தை கட்டியெழுபபுதல்" என்ற கருப்பொருளை மையமாகவைத்து சிறுவர்களது உரிமைகள் அவற்றை பாதுகாத்தல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்துவதற்கு திட்டமிடுதல் வேண்டும்.

இந்நிகழ்வுகளை கொண்டாட வசதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு மாணவர்களிடையே போட்டிகளை நடாத்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விடயத்தில் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உததியோகத்தரின் ஆலோசனைகளையும் உளளூராட்சி மன்றங்கள், வேறு திணைக்களங்களின் ஆதரவையும் பெற்று சிறந்த முறையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்துக் கொள்வது அவசியம். அத்துடன் இச் செயற்றிட்டத்திற்காக ஒவ்வோர் பிரதேச செயலர் பிரிவுக்கும் இரண்டாயிரம் ரூபாவை திணைக்களத்தால் வழங்கமுடியும எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-07,252)

## ஜனாதிபதி–ஆறுமுகம் நாளை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் நாளை புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து கிடைத்த அழைப்புக்கு ஏற்பவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)





நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளை படங்களில் காணலாம். (படங்கள் :அலுவலக செய்தியாளர்)

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. -குறள்

வலம்புரி

# எரிந்ததை – எரித்ததை ஈடுசெய்ய எரிபொருளின் விலையை அதிகரிப்பதா?

நாளுக்குநாள், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் எரிபொருளின் விலையை அதிகரிப்பது இலங்கை ஆட்சியாளர்களின் சாதாரண விடயமாகிவிட்டது.

மக்களின் அத்தியாவசியப் பொருளாகிய எரிபொருளின் விலையை அதிகரிப்பதன் மூலம், வாழ்க்கைச் செலவை உயர்த்தி மக்களின் நாளாந்த நுகர்வுக்குக் கேடு விளைவிப்பதே அரசின் திட்டமாகவுள்ளது.

எரிபொருளின் விலையை எல்லையற்ற முறையில் உயர்த்தலாம் என்பது அரசின் எண்ணமாகும். கடந்த 20 வருடகாலமாக யுத்தத்தை நடத்தி நாட்டை எரித்துச் சாம்பல்மேடாக்கிய சிங்கள ஆட்சியாளர்கள், இப்போது ஈவிரக்கமின்றி எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தி வருகின்றனர்.

உலக நாடுகளிடம் கையேந்தி - கடன்பட்டு இனப்போர் புரிந்து நாட்டின் செல்வ வளத்தை எரியூட்டிய இலங்கை ஆட்சியாளர்கள் இப்போதுகூட, படுபாதாளத்திற்குள் அமிழ்ந்துபோகும் நாட்டை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. மாறாக மீண்டும் யுத்தம் என்பதையே அவர்கள் விரும்புகின்றனர்.

இதற்கு இலங்கை வாழ் மக்களின் ஒற்றுமையின்மையும், அடக்குமுறைகளைக் கண்டு கிளர்ந்தெழாத அவர்களின் சலிப்புத்தன்மையுமே காரணமாகும்.

உலக வரலாற்றில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்த அரசுகளை மக்கள் புரட்சி மூலம் கவிழ்த்ததாகவே வரலாறு உண்டு. குறிப்பாக நெகிழ்ச்சியற்ற பொருட்களென பொருளியலாளர்களால் அடையாளம் காணப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிப்பது என்பது ஓர் நீதியான அரசின் பணியாக இருக்கமாட்டாது.

பொருட்களின் விலையை அதிகரித்து அதன் மூலம் செலவீனங்களை ஈடுசெய்யவேண்டிய தேவை ஏற்படின் மனித நுகர்வுக்குத் தீங்கான பண்டங்களுக்கு விலை அதிகரித்து, அதனை ஈடாக்கவேண்டும். இதைவிடுத்து மக்களின் அன்றாட தேவைகளுக்குப் பயன்படுகின்ற அத்தியாவசியமான எரிபொருட்களுக்கு விலையை அதிகரிப்பதென்பது சமூக நீதியைப் பேணவேண்டிய அரசின் கடமையாக இருக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை எரிபொருளின் இறக்குமதியை அரசு தனி உரிமையாக வைத்துள்ளது. இதற்குக் காரணம் அத்தியாவசியமான எரிபொருளின் இறக்குமதியை தனியாரிடம் வழங்கினால் தனியார் எரிபொருளின் விலையை அதிகரிப்பர். இத

# புலிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கண்காணிப்புக்குழுவிற்குக் கிடையாது

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வன்செயலகளைக் கைவிடும்படி தமிழீழ விடுதலைப்புலிகளைக் கேட்டுக்கொள்ள தமக்கு அதிகாரம் இலலையென யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இதுபற்றிக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒஸ்காட் சுவர்ணாஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு- கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் வன்முறைகளைக் கைவிடுமாறு கண்காணிப்புக்குழு கூறவேண்டும் என சில தமிழக்கட்சிகளும் ஆளுங்கட்சிகளும் எம்மிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

ஆனால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கண்காணிபபுக்குழுவுக்கு இத்தகைய அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

இதற்கிடையில் அண்மையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டை மிகக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

கண்காணிப்புக்குழு நடுநிலைமையாக செயற்படாது விடுதலைப்புலிகள் பக்கம் சாருவதாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால் கண்காணிப்புக்குழு அவ்வாறு செயற்படுவதில்லை.

அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நெருங்கிய ஆக்க பூர்வமான தொடர்புகளை ஏற்படுத்துவதற்குக் கண்காணிப்புக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றார்.

(ப-க,60)

## தேசிய அடையாள அட்டை குறித்த

# அரசின் சட்டமூலத்தை ஆராய கால அவகாசம் கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

தேர்தல்களின் போது உரிய முறையில் அடையாளம் காட்டுவதற்கு சகல வாக்காளர்களும் அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டும் என்ற நகல் சட்டத்திற்கான சட்டமூலத்தை ஆராய மேலும் கால அவகாசம் தேவை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுபற்றி கட்சியின் பிரதிப் பிரதம செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்ற அரசின் யோசனையை ஐக்கியதேசியக் கட்சி எதிர்க்கவில்லை.

இருந்தபோதும் உரிய அடையாளப் பத்திரங்களைக் கொண்டு வராதவர்கள் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் நிலை ஏற்படுவதால் இது குறித்து இன்று செய்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தரப்பைச் சேர்ந்த சகல கட்சித் தலைவர்களும் கூடி ஆராயவுள்ளனர்.

அதன்பின்னரே அரசின் இதுகுறித்த ஆலோசனைக்கு ஆதரவு வழங்குவார்கள் என்றார்.

இதேவேளை, வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்படுவதனால் பலர் வாக்களிக்கும் உரிமையை இழந்து விடுவதாக எதிர்க்கட்சித் தரப்பில் கூறப்பட்டுவருவது குறித்து அரசாங்க நடவடிக்கை பிரதம அமைப்பாளர் ஜெயராஜ் பெர்னாண்டோ ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் தேசிய அடையாள அட்டைகள் 6மாத கால விநியோகத்திட்டமாகவே அமையும் என்றும் வாககளிப்பதற்கு கடவுச்சீட்டு அல்லது வாகனமோட்டும் சாரதி அனுமதிப்பத்திரம் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்தார். (க-60)

## பொலிஸ் தடுப்புக் காவல் தொடர்பாக

# நடைமுறையில் உள்ள சட்டம் மாற்றியமைக்கப்படல் வேண்டும்

## பொலிஸார் வேண்டுகோள்

(கொழும்பு)

பொலிஸாரல் கைது செய்யப்படுபவர்களை 24மணி நேரத்துள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற சட்டம் மாற்றி அமைக்கப்படல் வேண்டும் என குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி சரத்லூகொட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்படுவோர் 24 மணிநேரங்களுககுள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படல் வேண்டும் என்ற சட்டம நடைமுறையில் உள்ளதனால் சந்தேக நபர்கள் மது ஆக்க

பிரிவுப் பொறுப்பதிகாரி சரத்லூகொட இவ்வாறு சந்தேக நபர்களைத் தடுப்புக்காவலில் வைத்து அவர்கள மீதான விசாரணைகளை நடத்தக்கூடிய அதிகாரங்களை உள்ளடக்கிய புதிய சட்டம் ஒன்று அமுல் செய்யப்படுவதன மூலம நாட்டில் தற்பொழுது அதிகரித்துவரும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், வன்முறைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ப-121)

# அரசைக் கவிழ்க்கும் நோக்கம்

தனியார் எரிபொருளின் விலையை அதிகரிப்பர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவர் என்பதேயாகும்.

ஆனால் இப்போது பொதுமக்களைத் தனியார் துறையிடமிருந்து பாதுகாக்கவேண்டிய அரசே எரிபொருளின் விலையைக் கண்டபாட்டில் அதிகரித்து வருகின்றது. இதனால் போக்குவரத்துச் செலவு, உற்பத்திச் செலவு, சந்தைப்படுத்தல் என்ற ரீதியில் விலை அதிகரிப்பு நாடுபூராகப் பரந்து பொதுமக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிக்கின்றது.

அதுமட்டுமன்றி எரிபொருளின் விலை அதிகரிப்பானது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் பெரிதாகப் பாதித்துவிடும். அதே வேளை உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவோ அன்றி புதிய முதலீடுகளை ஏற்படுத்தவோ எரிபொருளின் விலை அதிகரிப்பானது தடுத்துவிடும்.

எனவே எரிபொருளின் விலை அதிகரிப்பை அடிக்கடி ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைச் சுமைகளை உயர்த்துவதை நிறுத்த பொதுமக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் உறுப்பினர்கள் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும்.

இதற்குமேலாக பொது அமைப்புக்களும், நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புக்களும் அரசியல் நோக்கற்ற பொதுநலனுடன் போராட்டங்களை நடத்தி எரிபொருளின் - அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைத் தடுக்க முன்வரவேண்டும்.

சட்டம நடைமுறையில் உள்ளதனால் சந்தேக நபர்கள் மீது ஆக்க பூர்வமான விசாரணைகளை நடத்தப் பொலிஸாருக்குக் கால அவகாசம் போதாதிருக்கிறது.

எனவே சந்தேக நபர்களை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கான கால எல்லையை அதிகரிப்புச் செய்யும் விதமாக ஓர் சட்டம் அமுலுக்கு வரவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ள குற்றத் தடுப்புப் பொலிஸ்

# விடுதலைப் புலிகள் இருவர் படையினரால் தடுத்துவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் அரசியல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளை இராணுவத்தினர் தடுத்து வைத்தனர்.

இவர்கள் திருகோணமலை உவர்மலைப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் திருமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நிலைமையை தெளிவுபடுத்தினர்.

இது ஒரு போர் நிறுத்த மீறல் எனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர். அதற்குப் பதிலளித்த இராணுவத்தினர் இங்கு விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப் பட்டி அணிந்திருக்கின்றார்கள்.

இதுவும் ஒரு போர் நிறுத்த மீறல் தான் எனக் கூறினர். இதறகுப் பதில்கூறிய எழிலன், இந்த இடுப்புப் பட்டி தொடர்பாக ஏற்கனவே தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே, இதைப்பற்றி இராணுவத்தினர் மீண்டும் மீண்டும் பேசுவது அவர்களது விளக்கமின்மையைக் காட்டுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் அவர்களுக்கு பூரண விளக்கமளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (சு-121)

# அரசைக் கவிழ்க்கும் நோக்கம் எதுவும் எமக்குக் கிடையாது

## ஹெல உறுமய எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஆட்சிப்பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கம் எதுவும் தமக்குக் கிடையாது என ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சங்கைக்குரிய அத்துரலிய் ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் நேற்று மாலை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிகக்கும் சில சட்டமூலங்களுக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் . ஆயினும் இரண்டு தசாப்தகாலமாக இடம்பெற்று வரும் வட- கிழக்கின் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் தௌிவான கொள்கை ஏதும் இல்லாததால் நாம் அதுபற்றி சிந்திக்க வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (க-7,121)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

சுவாமி விவேகானந்தர்

## ஈ.பி.டி.பியின்...

ஈ.பி.டி.பி. சார்பாக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கொலைச் சம்பவத்தை சுதந்திர ஊடகவியலாளர் அமைபபும், ஈ.பி.டி.பியும் வன்மையாகக் கண்டித்துள்ளன. (இ-121)

## மக்களின்...

இச்சந்திப்பில் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான விடயங்கள் குறித்து இருதரப்பினரும் கருத்துக்களைப் பகிர்ந்து ஆராய்ந்தனர்.

மேலும் தாம் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார அலகின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் தயார் என்ற நிலைப்பாட்டையும், புலிகளின் தலைமைப்பீட முடிவையும் தமிழ்ச்செல்வன் ஐரோப்பிய ஒன்றியக் குழுவினருக்குத் தெளிவுபடுத்தினார்.

இச்சந்திப்பை அடுத்து ஐரோபபிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள இலங்கையின் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டுமென்ற விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பேச்சுவார்த்தை மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் எனவும், நாட்டின் நிரந்தர சமாதானத்தை உருவாக்கி மக்கள் அமைதியான இயல்புவாழ்வை அனுபவிக்க அரசாங்கமும், விடுதலைப் புலிகளும வழிசமைக்கவேண்டுமெனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-04,05,121)

## மருத் தேவாலய...

றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தென்பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பொக்கற், நகைகள் களவு தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் உற்சவகால காவல் பணிமனைப் பொறுப்பாளர் சி.இராஜகோபால் தெரிவித்தார். (இ-121)

## தேசப்பற்றாளர்...

நிர்வாகப் பணிகளிலும் மிகுந்த தேர்ச்சிபெற்றிருந்த இவரது மறைவு நிரப்பமுடியாதொரு இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள புலிகளின் அரசியற்துறையினர், அவரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அவரது பூதவுடல் இன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்திலும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலுள்ள சிரான் தொகுதியிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் யாழ்பபாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது. (ச)

# முன்னாள் கூட்டுறவு அமைச்சர் காதருக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல்காதரை எதிர்வரும் முப்பதாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம்உத்தரவு பிறப்பித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் குஸலா சறோஜினி வீரவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இவர் அரச பொது நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாவை தவறானமுறையில் கையாண்டதற்கான அறிக்கையை ஊழல் மோசடி புலனாய்வுப்பிரிவினர் நேற்று நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்புடைய பிரதேசம் கொழும்பு நீதிமன்றப் பிரிவிற்கு அப்பாற்பட்டதினால் அது தொடர்பாக உத்தரவு பிறப்பிக்க கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு சட்டஅதிகாரம் இல்லை. என்று அமைச்சர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு அவரை விடுதலைசெய்யவேண்டும் அல்லது பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டுமென அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை மறுத்த நீதிவான் பிணைவழங்கவும் மறுத்திருக்கிறார். அப்துல் காதர் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு அவகாசம் அளிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு நீதிவான் உத்தரவிட்டார். (இ-121)

## படுகொலைச் சம்பவங்களினால்...

நிலையைப் பாதிக்கின்றன.

இதேவேளை, இக்கொலைகளைச் செய்பவர்களைப் பற்றிய கருத்து எங்களைப் பொறுத்தவரை மாற்றம்பெறாது. ஏனென்றால் இக்கொலைகள் போர்நிறுத்த மீறல் என்று கருதினால் பின்னர் அதனை யார் செய்தார்கள் என்று கண்டுபிடிக்கவேண்டியிருக்கும். ஏனெனில் யார் செய்தார்கள் என்பது பற்றி ஊகிக்கமுடியாது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒருதரப்பு இக்கொலைகளைச் செய்திருக்கிறது எனக் கண்டால் நாம் அதற்குச் சரியான ஆதாரத்தைக் காட்டவேண்டும். இந்தத் தரப்பில் ஏதாவது ஒன்று இதனைச் செய்திருந்தால் அது நிச்சயமாக ஓர் போர் நிறுத்தத்தை மீறும் ஒரு செயல் தான். ஆனால் பலமான ஆதாரமின்றி நாம் யாரையும் குற்றஞ் சாட்டமுடியாது. இவ்வாறு சொல்வதற்காக நான் வருத்தப்படுகின்றேன்.

இந்தக் கொலை தொடர்பான பலமான ஆதாரங்களை பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது கிடைக்குமா என்று எனக்குத் தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-121)

# பெண்கள் சங்கம நிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது

நேற்றுக் காலை 9 மணிக்கு விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி தேசியக்கொடி ஏற்றிவைக்க வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் பெண்கள் சங்கம நிகழ்வுகள் ஆரம்பமானது.

நிகழ்வின் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் தி.ஞானவேல் ஏற்றிவைத்தார்..

வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் அலை தலைமையில் நிகழ்வுகள் மாலை வரை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், கனகரட்ணம், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், விடுதலைப் புலிகளின் மருத்துவர் எழின்மதி கரிகாலன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் உட்பட்ப் பல முக்கியஸ்தர்களும், அறுநூறுக்கு மேற்பட்ட பெண்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பிரச்சினைகளுக்கு தீர்வு தொடர்பாக பல முக்கியஸ்தர்கள் விளக்கவுரையினையும் வழங்கினார்கள்.

நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றும் போது, இன்று பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்று கூறமுடியாது, காரணம் இன்று இந்த விடுதலைப் போராட்டம் இவ்வளவு வளர்ந்துள்ளதற்கு பெண்கள் மிகமுக்கியமானவர்கள். இன்று இலங்கை இராணுவத்திலும் சரி, காவல்துறையிலும் சரி, பெண்கள் இருப்பதற்கு பிரதானமான காரணம் புலிகள் அமைப்பாகும். தேசியத் தலைவரின் எண்ணத்திலிருந்து பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டு இன்று பெண்கள் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ளனர். எனினும் எமது சமுதாயத்திலும் இன்றும் சில அடக்குமுறைகள் இருக்கத்தான் செய்கின்றது என்று குறிப்பிட்டார். (இ-121)

## அமெரிக்கத்....

அந்திராக்ஸ் கிருமி எனக் கருதப்படும் வெள்ளைத்துகள் காணப்பட்ட கடிதம் ஒன்று அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த செவ்வாய்க்கிழமை தூதரகம் மூடப்பட்டது தெரிந்ததே.

இந்த வெள்ளைத் துகள்கள் தொடர்பாக பரிசோதனைகள் நடாத்தப்படுவதாகவும் பரிசோதனைக்கமைய அது அந்திராக்ஸ் அல்ல என உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து அமெரிக்கத் தூதரகத்தையும் அதனை அண்மித்துள்ள அமெரிக்க அலுவலகங்களையும் மீண்டும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும கிறிஸ்லோஸ் மேலும் தெரிவித்தார். (இ-121)




யாழ் வணிகர் கழகம் நடாத்தும்

மாபெரும் யாழ் வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறு கைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(C/405)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.